


# உதயன்

பக்கங்கள் - 24 விலை 30 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

|5 ஆம் நாள் புதன்கிழமை 30 செப்ரெம்பர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051


**முச்சந்தி முரளி**

"எந்தினை முறை பட்டாலும்
இவையளிட்ட புத்தி மாறாது
கண்டியளோ! இவையள் இருக்கும் மட்டும்
நாடு முன்னுக்கு வந்த மாதிரித்தான்"

## '20'இல் திருத்தம்: அரசு உத்தேசம்!

கொழும்பு, செப்.30
அரசமைப்பின் 20ஆவது திருத்த வரைவில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்குஅரசுதீர்மானித்துள்ளது என்று தெரியவருகின்றது. 22 ➤

## 20க்கு எதிரான மனுக்கள் நீதிமன்றில் பரிசீலனை!

கொழும்பு, செப்.30
20ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்கள் நேற்றுப் 22 ➤



# கடந்த கால பதிலே தமிழருக்கு கிட்டும்

## தமிழ் மக்களின் போராட்டங்களுக்கு மறைமுகமாக மகிந்த எச்சரிக்கை

கொழும்பு, செப்ரெம்பர் 30
நாடு பாதுகாப்பாக உள்ளது. வடக்கில் நடக்கும் போராட்டங்களால் மீண்டும் கடந்த காலம் போன்ற நிலை ஏற்பட்டால் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட பதிலே பதிலாக அமையும். 22 ➤



# அடக்கியாள நினைத்தால் ஒன்றுபட்டு எதிர்ப்போம்!

## ராஜபக்ச அரசுக்கு சம்பந்தன் எச்சரிக்கை

கொழும்பு, செப்.30
வடக்கு, கிழக்கு தமிழ்பேசும் மக்களின் தாயகம். இங்கு தமிழ்பேசும் உறவுகளை அடக்கியாள முடியும் என்று ராஜபக்ச அரசு இனியும் எண்ணவேகூடாது. 21 ➤

## ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழப்பு



யாழ்ப்பாணம், செப்.30
கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் ரயிலுடன் மோதி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் நடந்துள்ளது. 22 ➤

## ஆணின் சடலம் மீட்பு



கிளிநொச்சி, செப்.30
பளை, தம்பகாமம் குளத்துக்குப் பின்புறம் உள்ள காட்டுப் பகுதியில் இருந்து நேற்று ஆண் ஒருவரின் சிதைவடைந்த உடல் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன. 22 ➤

## விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பயனின்றி சாவு!

யாழ்ப்பாணம், செப்.30
விபத்தில் சிக்கி சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். 22 ➤

## மோ.சைக்கிள் மோதி அருட்தந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், செப்.30
வீதியால் சைக்கிளில் சென்றவரை பின்புறமாக வந்தமோட்டார் சைக்கிள் மோதியது. 20 ➤

## 84 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி!

யாழ்ப்பாணம், செப்.30
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 24 மணி நேரத்தில் 84 மில்லி மீற்றர் 20 ➤

## 2 கிலோ கேரளக் கஞ்சா ஆனையிறவில் சிக்கியது



கிளிநொச்சி, செப்.30
ஆனையிறவு சோதனைச் சாவடியில் மேற்கொள்ளப்பட்ட சோத 20 ➤


செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும் அதிகூடிய முற்பணம்

அதிகபட்ச முற்பணத் தொகை
ரூ.66,000/-
0.79% மாதாந்த வட்டி வீதம் மட்டுமே

- அதிகபட்ச இரகசியத் தன்மை
- சிநேகபூர்வமான உடனடி சேவை
- சிறந்த பாதுகாப்பு

இச்சலுகை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள் அல்லது,
செலான் தங்கக் கடன் 011 200 88 88 செலான் வங்கி








மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய அரசின் ஆட்சியில் தினம் 7 ஏக். காடு நாசம்!

**கொழும்பு, செப்.30**

**புதிய அரசு பதவியேற்றதிலிருந்து இன்றுவரை நாளொன்றுக்கு ஏழு ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டுள்ளன என்று ஐக்கியத் தேசிய கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜயவர்தன தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்த 'சுற்றுச்சூழல் குரல்' நிகழ்ச்சியில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது இந்தத் தகவலைச் சுற்றுச்சூழல் அமைப்புகள் உறுதிப்படுத்தியுள்ளன. இந்த நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க அனைத்துப் பிரஜைகளும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும். உலக பாரம்பரிய சிங்கராஜா காடு மற்றும் சுற்றுச்சூழல் அழிவு தொடர்பான ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச எடுத்த தீர்மானத்தை முழு நாடும் அவதானித்தது. சுற்றுச்சூழல் அழிவு இப்போது நாட்டில் பேசப்படும் ஒரு விடயமாக மாறியுள்ளது- என்றார். (எ-இ)

# ரணில் வெளியிட்ட தகவல் பொய்

## அநுரகுமார குற்றச்சாட்டு



கொழும்பு, செப்.30

ஊழலுக்கு எதிரான செயலகம் தேசிய செயற்குழுவின் அனுமதியுடன் நிறுவப்பட்டது என்று முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்ட அறிக்கை பொய்யானது என நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பதவிக் காலத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு முன்பாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

அதற்கு முன்னர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவை நிறுவுவது, தேசிய செயற்குழுவின் ஒப்புதலுடன் செய்யப்பட்டது. ஆனால் ரணில் பங்கேற்ற தேசிய செயற்குழுவின் எந்தவொரு கூட்டத்தின்போதும் அத்தகைய ஆணைக்குழு தொடர்பாக எந்த விவாதமும் நடக்கவில்லை.

முன்னாள் பொருளாதார மேம்பாட்டு அமைச்சின் செயலாளர் நிஹால் ஜெயதிலகவால், ஜனாதிபதி விசாரணை ஆணையகத்துக்கு தயாரிக்கப்பட்ட ஆவணங்களை மதிப்பிடும் போது மட்டுமே அமைச்சரவை பத்திரத்தைப் பார்த்தேன்.

செயலகத்தை நிறுவுவது, தேசிய செயற்குழுவின் ஒப்புதலுடன் செய்யப்பட்டிருந்தால், அதை அதன் அப்போதைய தலைவர், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒப்புதல் அளித்திருக்க வேண்டும் என்றார். (எ-இ)

# 2,84,059 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை

கொழும்பு, செப்.30

நாட்டில் இதுவரை 2 லட்சத்து 84 ஆயிரத்து 59 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும், நேற்றுமுன்தினம் ஆயிரத்து 203 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும் கொவிட் 19 ஒழிப்புத்தேசிய படையணி தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட 46 ஆயிரத்து 330 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து இதுவரை வீடு திரும்பியுள்ளனர். தற்போது முப்படைகளால் நிர்வகிக்கப்படும் 75 கண்காணிப்பு நிலையங்களில் 6 ஆயிரத்து 882 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கொவிட - 19 ஒழிப்புத் தேசிய படையணி தெரிவித்துள்ளது. (எ-இ)



# வணிக பிரச்சினைகளுக்காக கரைச்சியில் குழு அமைப்பு

யாழ்ப்பாணம், செப். 30

கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழுள்ள கிளிநொச்சி சேவைச் சந்தையில் வர்த்தகர்கள், நுகர்வோர்கள், உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உறுப்பினர்கள், சபை உத்தியோகத்தர்கள், வர்த்தக சங்கத் தலைவர், வர்த்தகர், நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் ஆகியோரை உள்ளடக்கியதாக மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் நேற்று சந்தையில் நேரடி களப்பரிசீலனை மேற்கொண்டு நுகர்வோர்கள், வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனை கள் தொடர்பில் ஆராய்ந்தனர். (ம-222)

# விதிகளை மீறிய சாரதிகளுக்கு தண்டம் விதிப்பு

சாவகச்சேரி,செப்.30

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய வாகனச் சாரதிக்கு இரண்டு லட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சாரதி குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, தண்டம் விதிக்கப்பட்டது.

அதேவேளை மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவர் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர், மதுபோதையில் வீதி ஒழுங்கை மீறியும், சமிக்ஞை காண்பித்தபோது நிறுத்தாமல் சென்றவர் ஆகியோருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளும் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 50 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 40 ஆயிரம் ரூபாவும், மதுபோதையில் கவனமின்றியும் பொலிஸாரின் சமிக்ஞையை மீறியும் வாகனம் செலுத்தியவருக்கு 35 ஆயிரம் ரூபாவும் தண்டம் விதிக்கப்பட்டது. (கு-9)

# நுகர்வோர் அதிகார சபைக்கே தேங்காய் விவகாரம் தெரியும்

## அமைச்சர் ரம்புக்வெல கைவிரிப்பு

கொழும்பு, செப்.30

தேங்காயின் பருமனுக்கு ஏற்ப அவற்றின் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளபோதும், அதை நடைமுறைப்படுத்துவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. அந்த விடயத்தில் ஏற்பட்டுள்ள சந்தேகங்களை நுகர்வோர் அதிகார சபையே தீர்க்க வேண்டும்.

இவ்வாறு அரசின் ஊடகப் பேச்சாளர் ஹெகெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது

தேங்காயின் விலை தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நுகர்வோர் அதிகாரசபையாலேயே வெளியிடப்பட்டது. நாம் இங்கு அமைச்சரவை முடிவுகளை அறிவிக்க வந்துள்ளோம். அந்த விடயம் தொடர்பில் நுகர்வோர் அதிகார சபையிடம்தான் கேள்வி எழுப்ப வேண்டும். எனினும் இது தொடர்பாக நாம் அவர்களுக்கு அறிவிக்கின்றோம். என்றார்.

நாட்டு மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் நுகர்வுப் பொருளான தேங்காயின் விலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் தொடர்பாக அமைச்சரவையில் அவதானம் செலுத்தப்படவில்லையா? என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

அதுக்குப் பதிலளித்த அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல, அது தொடர்பாக ஆராயப்பட்டது. தேங்காயின் பருமனுக்கு ஏற்ப அவற்றின் விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கும் நிலையில், உங்களைப் போன்றே எங்களுக்கும் பிரச்சினைகள் இருக்கலாம். நுகர்வோர் அதிகார சபை மற்றும் இந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சு என்பவற்றிடமே இது தொடர்பாகக் கேட்க முடியும்- என்றார். (எ-இ)

# சிறுவர் கதை நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 30

ஜோர்ஜ் ஜெஸ்ரினின் 'சிங்கத்தை மயக்கிய சிறுவன்' (சிறுவர் கதை) நூல் வெளியீட்டு நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகர சபை முதல்வர் இமானுவல் ஆனல்ட் கலந்துகொள்ளவுள்ளார். (ஐ)

# மாடுகள் வெட்டத் தடை: அமைச்சரவை அனுமதி

**கொழும்பு, செப். 30**

**இறைச்சிக்காக மாடுகளை வெட்டுவதற்குத் தடை விதிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.**

பிரதமர் மஹிந்த ராஜபக்சவால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கே அமைச்சரவை நேற்றுமுன்தினம் ஒப்புதல் வழங்கியுள்ளது.

1958 ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க விலங்குச் சட்டம், 1893 ஆம் ஆண்டின் மாடுகள் கொலைக் கட்டளை சட்டம் மற்றும் தற்போது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கால்நடை கொலை தொடர்பாக உள்ளூர் அதிகாரிகள் நிறைவேற்றிய பிற தொடர்புடைய சட்டங்கள் மற்றும் விதிமுறைகளில் திருத்தம் செய்ய உடனடியாக தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

தேவையான மாட்டிறைச்சியை இறக்குமதி செய்வதற்கும், மாட்டிறைச்சி உட்கொள்ளும் மக்களுக்கு சலுகை விலையில் வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், வயதான, விவசாயத் திட்டங்களுக்குத் திறம்பட பயன்படுத்த முடியாத மாடுகளுக்கு ஒரு பொருத்தமான திட்டம் செயல்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் கொண்ட நாடு என்ற வகையில், இலங்கையின் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை வளர்ப்பதற்கு கால்நடை வளத்தின் பங்களிப்பு மகத்தானது. மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படுவதுஅதிகரித்து வருவதால் பாரம்பரிய விவசாய நோக்கங்களுக்காக தேவைப்படும் கால்நடை வளம் போதுமானதாக இல்லை.

போதுமான கால்நடை வளம் உள்ளூர் பால் தொழிலை மேம்படுத்துவதன் ஊடாக கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவுகிறது என்று அமைச்சரவையில் அமைச்சர்கள் சுட்டிக்காட்டினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## வீட்டுத்தோட்டத்தை ஊக்குவிக்க தென்மராட்சியில் நடவடிக்கை!

சாவகச்சேரி செப் 30

தென்மராட்சிப் பிரதேசத்தில் வீட்டுத் தோட்டத்தினை ஊக்குவிக்கும் வகையில் மரக்கறி நாற்று மேடைகள் அமைக்கப்பட்டு கன்றுகள் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் நாற்று மேடையாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு விதைகள் வழங்கப்பட்டு விவசாயத் திணைக்களத்தின், கண்காணிப்பில் நடுகைக்குரிய பருவத்தில் குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட நாற்று மேடையாளர்களுக்கான பயிற்சி வகுப்புகள் நேற்று கைதடி மற்றும் மீசாலை கமநல சேவைகள் நிலையங்களில் இடம் பெற்றன. (ம-9)

## சம்பிக்கவின் சாரதிக்கு நீதிமன்று பிடியாணை

கொழும்பு, செப்.30

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் சாரதியான துசித் திலும் குமாரவை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு கொழும்பு மேல் நீதிமன்று நேற்றுப் பிடியாணை பிறப்பித்துள்ளது.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இரவு, இராஜகிரிய பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் பலத்த காயமடைந்த சம்பவம் தொடர்பிலான வழக்கு நேற்றுக் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

துசித் திலும் குமார, மேல் நீதிமன்றத்தில் முன்னிலையாகாததால் மேல் நீதிமன்ற நீதிபதியால் பிரதிவாதியின் பிணையாளர்களுக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடல்ல மற்றும் துசித் திலும் குமார ஆகியோருக்கு வெளிநாடு செல்ல தடை விதித்த நீதவான், அது தொடர்பில் உடனடியாக குடிவரவு - குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார். பிரதிவாதிகள் ஒவ்வொரு மாதமும் முதலாவது வெள்ளிக்கிழமைகளில் முற்பகல் வேளையில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்குச் செல்ல வேண்டும் என்றும், தமது கடவுச்சீட்டுகளை மன்றில் ஒப்படைக்க வேண்டும் என்றும் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி தமித் தொட்டவத்த உத்தரவிட்டுள்ளார்.

பிரதிவாதிகளுக்கு புதிய கடவுச்சீட்டுகளை வழங்கக் கூடாது 'என்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணைகளின் பின்னர் வழக்கு இன்று வரை ஒத்திவைக்கப்பட்டது. (எ-இ)

## சூழல் அழிவு என்று போலிப் பரப்புரை!

### அரசு கூறுகின்றது

கொழும்பு, செப்.30

தற்போதைய அரசு அதிகாரத்துக்கு வந்த பின்னர், முன்னெப்போதும் இல்லாத அளவு சுற்றாடல் அழிக்கப்படுகின்றது என்று பொய்யான தகவல்களைப் பரப்ப முயற்சிக்கப்படுகின்றமை இனங்காணப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: காடுகள் தீயிட்டு அழிக்கப்படுகின்றன என்றும், இயற்கையாக காடுகளில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன என்றும் பொய்யான செய்திகள் வெளியாகின்றன. இவ்வாறான செய்திகளில் முழுமையாக பொய் மற்றும் திரிவுபடுத்தப்பட்ட தகவல்கள் அடங்கியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக வெளியிடப்படுகின்ற செய்திகள் பொய்யானவை என்பது தகுந்த ஆதாரங்களுடன் உறுதிப்படுத்தப்படும்போது அவை சமூக ஊடகங்களிலிருந்து நீக்கப்படுகின்றது. பின்னர் மீண்டும் வேறொரு பொய்யான செய்தி பிரசுரிக்கப்படுகின்றது. எதிர்க் கட்சியினர் மற்றும் அவர்களின் ஆதரவாளர்கள் பொய்யான செய்திகளைப் பரப்புகின்றனர். வேண்டுமென்றே பொய்யான செய்திகளை உருவாக்கி பல்வேறு ஊடகங்களின் மூலம் சமூகமயப்படுத்துபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது - என்றுள்ளது. (எ-இ)

## பெண் உரிமை மேம்பட கனேடிய அரசால் நிதி!

கொழும்பு, செப்.30

கனேடிய அரசு இலங்கைக்கு 2 இலட்சத்து 25 ஆயிரத்து 130 அமெரிக்க டொலரை வழங்கத் திட்டமிட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது பெண்களின் உரிமைகளை மேம்படுத்துவதற்காகவும், இலங்கையில் பெண்களின் அதிகாரம், பாலின சமத்துவத்தை மேம்படுத்துவதற்காகவும் செயற்படும் உள்ளூர் மற்றும் பிராந்திய பெண்கள் அமைப்புகள் மற்றும் இணைய சேவைகளை ஆதரிப்பதற்காக கனேடிய அரசு 2 லட்சத்து 25 ஆயிரத்து 130 அமெரிக்க டொலரை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் கனடாவின் பெண்கள் குரல் மற்றும் தலைமைத்துவ திட்டத்தின் ஒரு பகுதியாகும். இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய, ஓரங்கட்டப்பட்ட பெண்கள் மற்றும் சிறுமிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 15 முதல் 20 பெண்கள் உரிமை அமைப்புகளுக்கு, கனேடிய அரசு பல ஆண்டுகளாக நிதி வழங்குகிறது. புதுமையான யோசனைகள் மற்றும் நிறுவனங்களின் திறனை வளர்த்தல், நிறுவனங்களுக்கிடையில் இணைப்பை ஏற்படுத்துதல் மற்றும் கூட்டணியை உருவாக்குதல் ஆகிய செயற்பாடுகளுக்குக் கனடாவின் பெண்கள் குரல் அமைப்பு துணைபுரிகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பிரிட்டன் நிறுவனத்திடம் நட்டஈடு!

கொழும்பு, செப்.30

பிரிட்டனிலிருந்து குப்பைகள் அடங்கிய கொள்கலன்களை இலங்கைக்கு அனுப்பியமைக்காக பிரிட்டனிலுள்ள அதனுடன் தொடர்புடைய நிறுவனத்திடம் நஷ்டஈடு கோரப்படவுள்ளது என்று சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நியதிகளை மீறி 2017ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கைக்கு 263 கழிவு கொள்கலன்கள் பிரித்தானியாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 21 கொள்கலன்கள் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டன.

எஞ்சியுள்ள 242 கழிவு கொள்கலன்கள் தொடர்பாக நீதிமன்ற நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (எ-இ)

## தேர்தல் தொகுதிகளில் 100 வீட்டுத்தொகுதிகள்

### அரசு பரிசீலனை

கொழும்பு, செப்.30

நாடளாவியரீதியில் உள்ள அனைத்துத் தேர்தல் தொகுதிகளிலும் குடியிருப்புத் தொகுதிகளை அமைப்பது தொடர்பாக அரசு பரிசீலனை செய்து வருகின்றது.

அலரி மாளிகையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தக் குடியிருப்புத் தொகுதிகளில் தலா 100 வீடுகள் அமைக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எம்.சி.சி உடன்படிக்கையில் அமெரிக்காவுடன் கைச்சாத்திடுவது தொடர்பாக இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். (ம-இ)



# இலங்கையின் புதிய அரசமைப்பு சம உரிமையை உறுதிப்படுத்தும்

## மோடியிடம் மஹிந்த எடுத்துரைப்பு

**கொழும்பு, செப். 30**

**'13ஆவது திருத்தம் தொடர்பில் இந்திய பிரதமர் மோடி கருத்து வெளியிட்டிருந்தாலும், எந்தவொரு இனத்துக்கும் அநீதி இழைக்காத வகையிலும், சம உரிமையை உறுதிப்படுத்தும் விதத்திலும் புதிய அரசியலமைப்பு அமையும் என்ற விடயத்தையே எமது பிரதமர் குறிப்பிட்டார்' இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது, இலங்கை மற்றும் இந்திய பிரதமருக்கிடையில் நடைபெற்ற காணொளி மூலமான கலந்துரையாடலின்போது, 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என இந்திய பிதமர் குறிப்பிட்டார் என கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதே நிலைப்பாட்டில் இலங்கையும் உள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'இக் கலந்துரையாடலில் நானும் பங்கேற்றிருந்தேன். 13 தொடர்பில் இந்திய பிரதமரால் கருத்து வெளியிடப்பட்டது.

எனினும், எமது நாட்டு பிரதமர், எந்தவொரு இனத்துக்கும் அநீதி ஏற்படாதவகையில், சம உரிமை இருக்கும் விதத்திலான புதிய அரசமைப்பைப் பற்றியே கதைத்தார்.' என்றார். (ம-44)

பாடசாலைக்கு செல்லுமாறு கூறியதால்


# உயிர் துறப்பதற்கு மாணவன் முயற்சி

சாவகச்சேரி, செப். 30

பாடசாலைக்குச் செல்லுமாறு தாயார் வற்புறுத்தியதை அடுத்து, 12 வயதேயான மாணவனொருவன் தவறான முடிவெடுத்து உயிர்மாய்க்க முயற்சி செய்துள்ளான்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக பாடசாலைகள் அனைத்தும் பூட்டப்பட்டன. பின்னர் நிலமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டதை அடுத்து குறித்த மாணவன் பாடசாலைக்குச் செல்வதைத் தவிர்த்து வந்துள்ளான். எனினும் தாயார் பாடசாலைக்குச் செல்லுமாறு வலியுறுத்தியதை அடுத்து அந்த மாணவன் தவறான முடிவெடுத்து உயிர் துறப்பதற்கு முயற்சித்துள்ளான். மாணவனுக்கு தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகின்றது. (ம-9)





ஆவரங்கால் மேற்கு கிராமத்தில், மாணவர்களுக்கான நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. அங்குள்ள பாரதி சனசமூக நிலையத்திலேயே இந்த நூலகம் உருவாக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் மனிதம் அமைப்பின் கிராமத்துக்கொரு நூலகத் திட்டத்தின் கீழ் இந்த நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. (க)

## அஞ்சலி நிகழ்வின் முன்னேற்பாட்டு கூட்டம்

யாழ்ப்பாணம், செப்.30

மறைந்த பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்துக்கு யாழ்.நகரில் உள்ள இசைக் கலைஞர்களால் ஒரு அஞ்சலி நிகழ்வு நடத்தப்படவுள்ளது. அதற்கு முன்னேற்பாடாக இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் கூட்டம் நடைபெறவுள்ளது. கலைஞர்கள், ரசிகர்கள் கலந்துகொண்டு தங்கள் ஆதரவையும் ஆலோசனையையும் தெரிவிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (எ)

## கடற்றொழிலாளர் மீது பொலிஸார் தாக்குதல்

முல்லைத்தீவு, செப். 30

முல்லைத்தீவில் கடற்றொழிலுக்குச் சென்ற தொழிலாளி மீது கடற்படையினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியிலிருந்து நேற்று இரவு கடற்றொழிலுக்குச் சென்ற தொழிலாளி மீது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தொழிலாளி முல்லைத்தீவு பொதுமருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருகின்றார். (ம-19)

## அனுமதி அட்டை பெறல்

யாழ்ப்பாணம்,செப்.30

கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சகல பிரிவு மாணவர்களுக்கும் இன்று புதன்கிழமை அனுமதி அட்டை வழங்கப்படவுள்ளது. கணிதப்பிரிவு மாணவர்கள் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணி வரையும், உயிரியல் பிரிவு மாணவர்கள் காலை 9.30 மணி தொடக்கம் 10.30 மணி வரையும், வர்த்தகப்பிரிவு மாணவர்கள் முற்பகல் 10.30 மணி தொடக்கம் 11.30 மணி வரையும், தொழில்நுட்பப்பிரிவு மற்றும் கலைப்பிரிவு மாணவர்கள் முற்பகல் 11.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மாணவர்கள் தமது பெற்றோர் சகிதம், சுகாதார நடைமுறைகளைப் பிற்பற்றி, தேசிய அடையாள அட்டையுடன் வருகைதருமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## அனுமதி அட்டை வழங்கல்

கொடிகாமம்,செப்.30

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை இன்று புதன்கிழமை காலை 7.30 மணிக்கு வழங்கப்படவுள்ளன. அனைத்து மாணவர்களையும் பாடசாலைக்கு வருகை தருமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஐ)

## பணிநிலை வெற்றிடங்கள்

**ஆசிரியர்கள் (பகுதி நேரம்)**

**பாடங்கள் : வரலாறு, ஆங்கிலம்**

**தகைமைகள்**

1. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் மேற் குறிப்பிட்ட பாடங்களில் பட்டத்தினைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
2. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**பராமரிப்பாளர்கள் - பெண்.**

**தகைமைகள்**

1. க.பொ.த.உயர் தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.
2. உளவியல் மற்றும் துறைசார் கற்கை நெறிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3. அரச பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற அதிபர், ஆசிரியர்கள், ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பராமரிப்புத் துறையில் அனுபவம் மிக்கவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பித்தல் விரும்பத்தக்கது.
4. வயதெல்லை 25வயதிற்கு குறையாமலும் 50வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். அரச ஓய்வூதியர்களாயின் வயது எல்லை மற்றும் கல்வித்தகைமை என்பன பற்றி நிர்வாகம் தீர்மானிக்கும்.
5. விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லக்குழந்தைகளை அன்போடும் பாசத்தோடும் அரவணைத்து சமய விழுமியங்கள், ஒழுக்கத்திற்கு அமைவாக வழிப்படுத்தும் ஆற்றல், தியாக சிந்தனை, சமூக அர்ப்பணிப்பு மிக்க உணர்வோடு இருத்தல் வேண்டும்.

**சாரதிகள் - ஆண்**

**தகைமைகள்**

1. இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 30வயதிற்கு குறையாமலும் 55வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. க.பொ.த.சாதாரண தரத்திற்கு குறையாத கல்வித்தகைமை.
4. சகல வாகனங்களும் செலுத்தக்கூடிய வலுவில் உள்ள சாரதி அனுமதிப் பத்திரத்தினை வைத்திருத்தல் வேண்டும்.
5. நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும்.

**சமையலாளர்கள் - பெண்**

**தகைமைகள்**

1. இல்ல நடைமுறைகளுக்கு அமைவாக இல்லத்தில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடிய நல்ல தேகாரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.
2. வயதெல்லை 30வயதிற்கு குறையாமலும் 60வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
3. குடும்பப் பொறுப்பற்ற தனியாட்கள் விரும்பத்தக்கது.
4. குறித்த துறைசார் கற்கைகளை முடித்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. அர்ப்பணிப்பும் சேவை மனப்பாங்கும் உடையவராக இருத்தல்

**கோரப்பட்டுள்ள பணிநிலை வெற்றிடங்கள் அனைத்துக்குமான பொதுவான குறிப்புக்கள்.**

- இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும்.
- உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
- 05.10.2020ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது
- நேரில் சமுகமளித்து விண்ணப்பிக்க முடியும்.
- 12.10.2020 அன்று நேர்முகத்தேர்வு இடம்பெறும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் எந்தப் பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
ஜெயந்திநகர், கிளிநொச்சி

ச.மோகனபவன்,
தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்,
0214923118.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இடியப்பச் சிக்கலில் 20

சாண் ஏற முழம் சறுக்கிய கதையாக மாறத் தொடங்கியிருக்கின்றது 20ஆவது திருத்த வரைவு. நாடாளுமன்றத் தேர்தலின்போதே 19ஆவது திருத்தத்தை ஒழித்து புதிய திருத்தங்களை ஏற்படுத்தப் போகின்றோம் என்று பொதுஜன பெரமுனவினர் பரப்புரை செய்திருந்தனர். சொன்னபடியே புதிய அரசு பதவியேற்ற கையோடு முதல் வேலையாக 20ஆவது திருத்த வரைவைத் தயாரித்து அது வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. அதுவரையிலும் எந்தவிதப் பிரச்சினையும் ஏற்படவில்லை. ஆனால் என்றைக்கு வர்த்தமானியில் 20ஆவது திருத்த வரைவு பிரசுரிக்கப்பட்டதோ அன்றைக்குத் தொடங்கிய சர்ச்சைகள் இப்போது வேறுவேறு வடிவங்கள் எடுத்து அரசைப் போட்டுத்தாக்கியபடி இருக்கின்றன.

20ஆவது திருத்த வரைவில் சில அம்சங்கள் ஆளும் தரப்புக்குள்ளேயே அதிருப்தியை உண்டுபண்ணின. அதனால் முதலில் அவர்களை அமைதிப்படுத்திய பின்னர்தான் எதிர் வரிசையில் இருப்பவர்களின் ஆதரவைப் பெறமுடியும் என்ற நிலை. எனவே 20ஆவது திருத்தவரைவில் சில மாற்றங்களை உண்டுபண்ணிவிட்டு அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற்றி சர்வ வல்லமை பொருந்தியவராக ஜனாதிபதியை மாற்றுவதே அரசின் முதல் திட்டம். அதன்பின்னர் தங்களுக்கு ஏற்றவகையில் புதிய அரசமைப்பை உருவாக்கி அதை பொதுவாக்கெடுப்பில் மிக இலகுவாக நிறைவேற்றுவது இரண்டாவது திட்டம். இந்த இரண்டாம் திட்டத்தில் ஏற்கனவே பேரினவாதிகளை உறுத்திக்கொண்டிருக்கும் 13ஆவது திருத்தச்சட்டத்தில் உள்ள விடயங்களை சத்தம்சந்தடி இல்லாமல் புதைப்பதும் ராஜபக்சக்களின் மறைமுகத் திட்டமாக இருந்தது.

ஆனால், 13ஆவது திருத்த விடயத்தில் எந்தவித விட்டுக்கொடுப்புக்கும் இந்தியா தயாராக இல்லை என்பது ஐ.நா சபையில் காணொலி மூலமான உரையின்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழுத்தம் திருத்தமாகத் தெரிவித்திருக்கின்றார். இதன்மூலம் புதிய அரசமைப்பை உருவாக்கும்போது பல நெருக்கடிகளை அரசு சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை மோடியின்கூற்று கோடிகாட்டியிருக்கின்றது. குறிப்பாக 13ஆவது திருத்தத்தில் உள்ள அம்சங்களில் ஏதேனும் ஒன்று விடுபட்டாலும் இந்தியா அதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டாது என்ற எச்சரிக்கையே அது. எனவே 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதைவிட இப்போது 13ஆவது திருத்தத்தை எப்படி இல்லாமல் ஆக்குவது என்ற தலையிடி அரசுக்குப் புதிதாக முளைத்திருக்கின்றது.

இலங்கை ஜனாதிபதியை சர்வ வல்லமை பொருந்தியவராக மாற்றுவதும் மாற்றாததும் உள்நாட்டு விவகாரம். 20ஆவது திருத்தத்தின் ஊடாக ஒரு சர்வாதிகார முறைமை இலங்கையில் உண்டாகும் என்று பல நாடுகளும் சர்வதேச அமைப்புக்களும் விமர்சிக்கின்றபோதும், அத்தகைய விமர்சனங்களால் எந்தவித தாக்கத்தையும் உருவாக்க முடியாது. 'இது எங்கள் நாட்டு விவகாரம். நாங்கள் பார்த்துக்கொள்கின்றோம்' என்ற ஒற்றை வார்த்தையோடு அந்த விமர்சனங்களைத் தூக்கி எறிந்துவிட முடியும். ஆனால் 13ஆவது திருத்தம் அப்படிப்பட்டதல்ல. 13ஆவது திருத்தமும் உள்நாட்டு விடயங்களையே கொண்டிருக்கின்றபோதும் அது உருவாக்கப்பட்ட வரலாறு வித்தியாசமானது.

முற்றுமுழுதாக 13ஆவது திருத்தத்தின் உருவாக்கத்திலும் நடைமுறைப்படுத்தலிலும் இந்தியாவே பின்னணியில் இருந்தது-இருக்கின்றது. எனவே அந்தத்திருத்தத்தில் ஒரு சொல்லை மாற்றினாலும்கூட அது இந்தியாவை எதிர்ப்பதாக அல்லது புறக்கணிப்பதாகவே அர்த்தம் கொள்ளப்படும். எனவே இப்போது கல்லில் விழுந்த சேலை போல 13ஆவது திருத்தம் மாறிவிட்டது. ஆக, 20ஆவது திருத்தத்தில் கைவைப்பதைவிட 13ஆவது திருத்தத்தைக் எப்படிக் கைகழுவது என்பதே இலங்கைக்கு இப்போது ள்ள பெரும் சிக்கல். 13ஆம் திருத்தம் என்ற முதல் சிக்கலை தாண்டினால் மட்டுமே 20 திருத்தத்தால் ஏற்படப் போகும் நன்மைகளை ராஜபக்சக்கள் அனுபவிக்க முடியும். இல்லாவிடில் 20 ஐக் கொண்டு வந்தும் ராஜபக்சக்கள் நினைத்தபடி புதிய அரசமைப்பை உருவாக்க முடியாது. என்ன செய்யப் போகிறார்கள் ஆட்சியாளர்கள்?

# இலகு ரயில் சேவை திட்டம் தோல்வி

கொழும்பு,செப்.30

**கொழும்பை அண்டிய பகுதிகளில் இலகு ரயில் சேவை தொடங்குவதற்கான திட்டத்தை நிறுத்தும் முடிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல, எல்.ஆர்.டி. திட்டத்துக்கு மாற்று வழியைத் தேட அரசு முடிவு செய்துள்ளது எனத் தெரிவித்தார்.
இந்தத் திட்டம் தொடர்பாக அமைச்சரவை விரிவான கலந்துரையாடல்களை நடத்தியது. இது சிறந்த வழி அல்ல என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.
இந்தத் திட்டத்தை நிறுத்த முடிவு செய்யும் போது, திட்டத்தின் செலவு மற்றும் சுற்றுச் சூழலுக்குச் சேதம் ஏற்படுவது தொடர்பில் பரிசீலிக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில், உத்தேச கொழும்பு இலகு ரயில் சேவைத் திட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு, ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர, போக்குவரத்து அமைச்சுக்கு அறிவுறுத்தினார் என போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.
கொரோனாத் தொற்று காரணமாக தற்போதுள்ள கடன்களை திருப்பிச் செலுத்துவதில் இலங்கை அரசு சிரமங்களை எதிர்கொண்டுள்ள நிலையில், கடன்களின் கீழ் தொடங்கப்பட்ட பல திட்டங்களை மீளாய்வு செய்ய போக்குவரத்து அமைச்சுக்கு அறிவுறுத்தப்பட்டது.
அத்தோடு மேலும் பல திட்டங்களை நிறுத்தவோ அல்லது ஒத்திவைக்கவோ முடிவு செய்துள்ளதாக போக்குவரத்து அமைச்சின் செயலாளர் மொண்டி ரணதுங்க தெரிவித்தார்.
இலகு ரயில் சேவை திட்டம் ஆரம்பத்தில் நகர்ப்புற மேம்பாட்டு ஆணைக்குழுவின் கீழ் தொடங்கப்பட்டது. ஆனால் புதிய அரசின் கீழ் இது போக்குவரத்து அமைச்சின் கீழ் வருகிறது.
போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக ஜப்பானிய நிதியுதவியுடன், முன்னாள் அரசால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டது.
இந்தத் திட்டத்தின் நோக்கம் கொழும்பு கோட்டையிலிருந்து மலாபே வரை 16 ரயில் நிலையங்களுடன் 17 கிலோ மீற்றர் நீளமுள்ள இல குரக ரயில் போக்குவரத்து முறை மூலம் போக்குவரத்துத் திறனை அதிகரிப்பதாகும். (க-இ)


## சுகாதாரச் சீர்கேடு: உணவகத்துக்கு 'சீல்'

யாழ்ப்பாணம்,செப்.30
பத்துக்கும் மேற்பட்ட சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயங்கிய, உணவகத்தை உடனடியாக மூடிச் சீல் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது.
பொதுமக்களின் முறைப்பாட்டை அடுத்து, யாழ்.மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பா.சஞ்ஜீவன், யாழ்.நகரில் காங்கேசன்துறை வீதி சத்திரச் சந்தியில் இயங்கி வந்த உணவகத்தைச் சோதனைக்குட்படுத்தினார். அங்கு பல குறைபாடுகள் இருந்தமை தெரிய வந்தது.
சமையலுக்காகப் பழுதடைந்த நிலையிலுள்ள இறைச்சி, மீன்வகைகள் குளிர்சாதனப் பெட்டியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. பழுதடைந்த மரக்கறி வகைகள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டன. கையில் காயங்களுடன் ஒருவர் சமையல் வேலையில் ஈடுபட்டமையையும் அவதானித்தனர்.
இதையடுத்து உணவக உரிமையாளருக்குக்கெதிராக பத்துக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, யாழ். மேலதிக நீதிமன்றால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
உணவகத்தை உடனடியாக மூடிச் சீல்வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான், உணவக உரிமையாளரை ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறும், கையில் காயங்களுடன் சமையல் வேலையில் ஈடுபட்டவர் பற்றிய மருத்துவ அதிகாரியின் அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் தெரிவித்து, மேல் விசாரணையை ஒத்தி வைத்தார்.
குளிர்சாதனப் பெட்டியில் பழுதடைந்தநிலையிலிருந்த மீன், இறைச்சி உணவக உரிமையாளர் முன்னிலையில், சுகாதாரப் பரிசோதகரால் மண்ணெய் ஊற்றி எரித்து அழிக்கப்பட்டன. (க-115)

## கலந்துரையாடல்

அரசமைப்புக்கான் 20 ஆவது திருத்தமும், இலங்கையின் எதிர்காலமும் என்ற தலைப்பிலான விசேட கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம் பெறும்.
சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் நிகழ்வில் அரசியல் ஆய்வாளர்கள் கலந்துகொண்டு கருத்துரைகளை நிகழ்த்தவுள்ளனர்.
கருத்துரைகளைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (க)

## ஜனநாயகத்தைப் பாதுகாக்கவே 20 திருத்தத்தை எதிர்க்கிறோம்



கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு,செப்.30
அரசின் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்வது எமது நோக்கமில்லை. ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே 20 ஆவது திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்தார்.
அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக எதிரணியினர் இணைந்து ஊடக சந்திப்பொன்றை கொழும்பில் நேற்று நடத்தினர்.
இதன்போது, கருத்து வெளியிடுகையில் கரு ஜயசூரிய இதனைத் தெரிவித்தார்.
சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசியக் கட்சியின் சார்ப்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.
(க-இ)

# கதவடைப்பு போராட்டத்திலும் கடமை தவறாத கரைச்சி சபை

## வியாபாரிகள் விசனம்

**கிளிநொச்சி, செப். 30**

**ராஜபக்ஷ அரசின் அடக்குமுறைகளுக்கு எதிராக வடக்கு, கிழக்குப் பகுதிகளில் நேற்றுமுன்தினம் கதவு அடைப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், கிளிநொச்சியில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்த வியாபாரிகளிடம் வரி அறவிடப்பட்டுள்ளது தொடர்பில் வியாபாரிகள் விசனமடைந்துள்ளனர்.**

முழுக் கடையடைப்பு என்பதால், கிளிநொச்சி சேவைச் சந்தையின் செயற்பாடுகளும் இடம்பெறவில்லை. எனினும் மக்களுக்கான அத்தியாவசிய மரக்கறி, மீன், இறைச்சி உள்ளிட்டவற்றை கிளிநொச்சி கனகபுரம் வீதியில் வைத்து வியாபாரிகள் விற்பனை செய்து வந்தனர். இதன்போது அங்கு சென்ற கரைச்சிப் பிரதேச சபை ஊழியர்கள் வர்த்தகர் ஒருவருக்கு 500 ரூபா வீதம் வரிப் பணத்தை அறவிட்டுள்ளனர். இந்தச் சம்பவமே வியாபாரிகள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

"வழமைபோன்று வர்த்தக நடவடிக்கைகளுக்காக கிளிநொச்சி சந்தைக்குச் சென்றிருந்தோம். எவ்வித முன்னறிவித்தலும் இல்லாது சேவைச் சந்தையின் பிரதான வாயில் பூட்டப்பட்டிருந்தது. எமது பொருள்களை வீதி ஓரத்தில் வைத்து விற்பனை செய்ய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டோம். வீதியில் வைத்து பொருள்கள் விற்பனை செய்யும் போதும் வரிப் பணத்தை அறவிடுகின்றனர். ஹர்த்தால் தினத்திலும், பிரதேச சபை தமது நடவடிக்கையைக் கைவிடாது இவ்வாறு செயற்பட்டமை கவலைக்குரியது"-என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

"நாங்கள் சந்தையைப் பூட்டவில்லை பொதுச் சந்தை வர்த்தகர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவே சந்தை பூட்டப்பட்டது. அங்கு உள்ள பொருள்கள் ஏதாவது ஒன்று இவ்வாறான தினத்தில் காணாமற் போனால் அதற்கு நாமே பொறுப்புக் கூற வேண்டும் எனவே காலையில் யாரும் வியாபாரம் செய்ய வருகை தரவில்லை. அதனால் தான் சந்தையைப் பூட்டி காவலாளிகளை நியமித்தோம். வீதியில் வியாபாரம் செய்பவர்களுக்கு நாளாந்தம் வரி அறவிடப்படுவது வழமை. அது போலவே இந்த 9 வியாபாரிகளிடமும் வரி அறவீடு செய்யப்பட்டது"என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ப-6)

# நியாய விலையில் முட்டை விற்பனை

குருநகர்,செப்.30



யாழ்.நகரில் உள்ள முட்டை விற்பனை செய்யும் வியாபார நிலையங்களில் கட்டுப்பாட்டு விலையில், முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்று பாவனையாளர் தெரிவித்தனர்.

அதன்படி வெள்ளை நிற முட்டை 16.50 ரூபாவாகவும் சிறப்பு முட்டை ஒன்று 18 ரூபாவாகவும் விற்பனைசெய்யப்படுகிறது. இதேவேளை உள்ளூர் கடைகளில் 25 ரூபாவுக்கும் அதிகமாக இந்த முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்படுகிறது. (ப-51)

# 'சிம்'களை வாங்க வந்தது கட்டுப்பாடு

கொழும்பு,செப்.30

ஐந்து சிம் அட்டைகளுக்கு மேல் ஒருவர் வாங்க முடியாத வகையில் பாதுகாப்பு அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அதன்படி, அனைத்துத் தொலைபேசி மற்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்களையும் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையத்தின் கீழ் இணைத்து பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையில் வைக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன உத்தரவிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. வேறு நபர்களின் பெயரில் சிம்களை வாங்குவதன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (ப-இ)



# மன். பிரஜைகள் குழுவின் ஆளுநர் சபை தெரிவு

மன்னார், செப்.30

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் பதினொராவது ஆளுநர் சபைக்கான தெரிவு மன்னார் மறை மாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கடந்த சனிக்கிழமை மன்னார் கலையருவி மண்டபத்தில் இடம்பெற்றது. தேர்தல் முறைப்படி வாக்களிப்பு மூலம் தெரிவு இடம்பெற்றது.

மன்னார் தேர்தல் உதவி ஆணையாளர் ஜெனிற்றன், மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட சமூக சீர்திருத்தத் திணைக்கள அதிகாரி எம்.என்.நஜீம் ஆகியோர் தேர்தலில் கடமையில் ஈடுபட்டனர்.

மன்னார் மாவட்ட பிரஜைகள் குழுவின் போஷகராக மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையும், தலைவராக அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார், உப தலைவராக எம்.எம்.சபூர்தீன் (சிரேஷ்ட சட்டத்தரணி) செயலாளராக ஏ.பத்திநாதன் குரூஸ் (ஓய்வு நிலை கல்வி அதிகாரி), உப செயலாளராக எம்.சீ.முகம்மது றம்சீன், பொருளாளராக ஏ.அன்ரன் றேம்ஸ் குரூஸ் (இலங்கை தேசிய நிர்மாணிகள் சங்க வட மாகாணக் கிளைத் தலைவர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்தோடு ஆளுநர் நிர்வாக சபை உறுப்பினர்களாக அருட்பணி எஸ்.மாக்கஸ் அடிகளார், எல். லூக்காஸ் தர்மதாஸ் (ஓய்வுநிலை அதிபர்), எஸ்.செசாரியஸ் பெர்னாண்டோ (ஓய்வு நிலை வங்கி முகாமையாளர்), எல்.ஜி.வாஸ் கூஞ்ஞ (சிரேஷ்ட ஊடகவியலாளர்), சீ.தயாளன், (மனித உரிமை அபிவிருத்தி நிலையத்துக்கான மன்னார் இணைப்பாளர்), எஸ்.ஜேம்ஸ் பிரான்சீஸ் யேசுதாசன் (முன்னாள் மன்னார் நகர சபை உப முதல்வர்), ஏ.வில்பிரட் அர்ஜுன் (சிரேஷ்ட சட்டத்தரணி), எஸ்.எஸ்.இராமகிருஷ்ணன் (ஓய்வு நிலை எந்திரி) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ப-60)

# அளவீடுகள் தெரியாத அரசாங்க பிரதானிகள்

## அநுரகுமார கிண்டல்

கொழும்பு, செப்.30

அரசாங்கத்தின் பிரதானிகளுக்கு நாட்டில் தற்போது அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகள் தொடர்பாகக் கூடத் தெரியவில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் பயன்படுத்தப்படும் அளவீடுகள் 1980 ஆண்டுகளில் மாற்றப்பட்டுள்ளன. நீளத்தை அளக்க மீற்றர் மற்றும் சென்ரி மீற்றர் பயன்படுத்தப்படுகிறது. வர்த்தமானி அறிவித்தலில் அங்குலம் என்று கூறப்பட்டிருந்தது. அங்குலம் அளவுகளில் அளவிட்டு எவராவது குற்றம் செய்தால், வழக்குத் தாக்கல் செய்ய முடியாது. மீற்றர் மற்றும் சென்ரி மீற்றர் அளவீடுகளே நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அளவீடுகள். குறைந்தது நாட்டில் அங்கீகரிக்கப்பட்ட அளவீட்டு முறை என்ன என்பது கூடத் தெரியாமல் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளதைக் காணமுடிகிறது - என்றார். (ப-இ)

# கோடா வைத்திருந்த பெண்ணுக்குப் பிணை

கிளிநொச்சி, செப்.30

கோடாவை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பளைப் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

பளைப் பொலிஸ் நிலையப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து நேற்றுமுன்தினம் அந்தப் பெண் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து ஒரு பரல் கோடா மற்றும் உற்பத்தி உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன சந்தேகநபரான பெண் மேலதிக விசாரணையின் பின் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார் என்று பொலிஸ் தகவல்கள் தெரிவித்தன. (ப-6)

# பயிற்சிப் பட்டறை

கொடிகாமம். செப்,30

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், பாடசாலை முகாமைத்துவக் குழு உறுப்பினர்களுக்கான பாடசாலைச் சமூக ஒருங்கிணைப்பு விழிப்புணர்வுப் பயிற்சிப்பட்டறை அண்மையில் கிளி/சோரன்பற்று சி.சி.த.க பாடசாலையில் பாடசாலை அதிபர் என்.ராமதாஸ் தலைமையில் நடைபெற்றது.

ஒவ்வர் சிலோன் அமைப்பின் ஏற்பாட்டில் கொய்க்கா நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி.கமலராஜன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன், உதவிக் கல்விப் பணிப்பாளர் கு.பிரதீபன், பெற்றோர்கள் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (ப-159)

# அரசியலிலிருந்து விலகினார் சுஜீவ சேனசிங்க

கொழும்பு, செப்.30

அரசியலில் இருந்து விலகுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிப் பொதுச் செயலாளர் சுஜீவ சேனசிங்க அறிவித்துள்ளார். கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து விலகுகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தலில் அடைந்த தோல்வியைத் தொடர்ந்தே தான் அரசியலில் இருந்து விலக முடிவு செய்துள்ளேன் என அவர் தனது கட்சிக்கு அறிவித்துள்ளார். (ப-இ)

# தனிமைப்படுத்தல் நிறைவு; 157 பேர் வீடு திரும்பினர்

வவுனியா, செப்.30

கொரோனாத் தொற்றுக் காரணமாக வவுனியா பம்பைமடு தனிமைப் படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த 157 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

கொரோனாத் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சீசேல் நாட்டில் இருந்து 157 பேர் அண்மையில் அழைத்து வரப்பட்டனர். 14 நாள்கள் தனிமைப் படுத்தல் காலத்தை நிறைவு செய்தநிலையில் அவர்களது சொந்த இடங்களான காலி, களுத்துறை, மாத்தறை, இரத்தினபுரி, கொழும்பு, குருநாகல், நீர்கொழும்பு, கேகாலை, அனுராதபுரம், யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளுக்கு பஸ்மூலம் அனுப் பப்பட்டனர்.

வவுனியா மாவட்டத்தில் உள்ள எட்டு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்து கடந்த நான்கு மாதங்களில் 4,072 பேருக்கும் மேற்பட்டோர் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது. (ஐ-110)

# வாழ்வாதாரத் தொழிலை அடியோடு சரித்த மழை

## கிளிநொச்சியில் அவலம்

கிளிநொச்சி,செப்.30

கிளிநொச்சி ஜெயந்திநகர் பகுதியில் நேற்று அதிகாலை வீசிய கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக பெரிய மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததில் தச்சுப்பட்டறை முற்றாக சேதமடைந்துள்ளது.



இதனால் தச்சுப் பட்டறை மூலம் தமது வாழ்வாதாரத்தைப் போக்கி வந்த வறிய குடும்பம் ஒன்று கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் காரணமாக நாட்டின் பல இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்து வருகிறது. வடக்கின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் இரவு கடும் காற்றுடன் கூடிய மழை பெய்தது. கிளிநொச்சி ஜெயந்திநகர்ப் பகுதியில் நேற்று அதிகாலை பலத்த காற்றுடன் கூடிய மழை பெய்தது. இதனால், வீட்டில் நின்ற பெரிய மா மரம் சரிந்து வீட்டின் மேலும், தச்சுப் பட்டறையின் மேலும் வீழ்ந்துள்ளது. இதனால் அந்தப் பட்டறை முற்றாகச் சேதமடைந்தது. வீடு பகுதியளவில் சேதமடைந்தது. பட்டறையில் இருந்த இயந்திரங்களும் சேதமாகியிருக்கலாம் என்று கூறப்பட்டது.

குடும்பத்துக்கான வருமானத்தை அந்தப் பட்டறையின் மூலமாகவே குடும்பத் தலைவர் பெற்று வந்துள்ளார். இப்போது அந்தப் பட்டறை சரிந்தது அந்தக் குடும்பத்தை வெகுவாகப் பாதித்துள்ளது. சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் ஜெயகரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். (ஐ-6,222)

# தொடர்பு காரியாலயம் திறப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்ப்பாண ஆசிரியர்களின் கல்விசார் ஊழியர்கள் தேவையைக் கருத்திற் கொண்டு கல்விக் கூட்டுறவுச் சங்கத்தின் பிராந்திய தொடர்புக் காரியாலயம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கோண்டாவில் இந்துக் கல்லூரியில் திறக்கப்படவுள்ளது.

இந்தக் காரியாலயத்தின் மூலம் ஆசிரியர்கள் தங்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்காலத்தில் பிராந்தியக் காரியாலயம் ஒன்றை மிக விரைவில் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று வடக்கு மாகாண பணிப்பாளர் வேரல் வின் தெரிவித்தார்.

இந்தத் திறப்பு விழாவுக்கு கல்விசார் ஊழியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சர்வதேச அஞ்சல் தினத்தில் பொருள்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.30

சர்வதேச அஞ்சல் தினத்தை முன்னிட்டு அஞ்சல் திணைக்களத்தால் வீடுகளில் காணப்படும் பாவனையற்ற இலத்திரனியல் மற்றும் எலக்ரோனிக் நீக்கப்பட்ட பொருள்களை சேகரிக்கும் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒக்ரோபர் மாதம் ஒன்பதாம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச அஞ்சல் தினத்தையொட்டி ஒக்ரோபர் 5 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இந்தப் பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இதற்கு அந்தந்த உள்ளூராட்சி சபைகளும் பங்களிப்புச் செய்யவுள்ளன. நாட்டில் உள்ள 653 அஞ்சல் அலுவலகங்கள் மூலம் சுற்றாடலை பாதுகாக்கும் நடவடிக்கையாக இந்தப் பொருள்கள் சேகரிக்கப்படவுள்ளன.

பொதுமக்கள் தமது வீடுகளில் பாவனையற்றுக் காணப்படும் இலத்திரனியல் மற்றும் எலக்ரோனிக் நீக்கப்பட்ட பொருள்களான தொலைக்காட்சிப் பெட்டி, வானொலி, மின்விசிறி, மடிக்கணினி, கைபேசி, தொலைபேசி, தொலைநகல் இயந்திரம், அரைப்பான் (கிரைண்டர்), ரைஸ் குக்கர், சலவை இயந்திரம் உள்ளிட்ட பொருள்களை கையளிக்க முடியும் என்று அறிவிக்கப்பட்டது. (ஐ-9)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி மாணவ முதல்வர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. 2021 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பிரிவில் பயிலும் 22 மாணவர்களுக்கு சின்னம் சூட்டப்பட்டது. (ஐ)

# கிளிநொச்சி மருத்துவமனைக்கு புதிய மருத்துவ நிபுணர்கள்

## நோயாளரின் சிரமம் இனித் தீரும்

கிளிநொச்சி,செப்.30

கிளிநொச்சி, பொது மருத்துவமனையில் புதிதாக சில மருத்துவ நிபுணர்கள் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளமையால், அந்தச் சிகிச்சைகளுக்காக வேறு மாவட்ட மருத்துவமனைகளுக்குச் செல்லும் நோயாளர்களின் அசௌகரியங்கள் தீர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனை கொவிட்- 19 காலப் பகுதியில் மக்களுக்கான சிறந்த சேவையை வழங்கியிருந்தது. எனினும் அங்கு மருத்துவர்கள் பற்றாக்குறை காணப்படுகிறது. சுமார் 50 வீதமான மருத்துவர்கள் இன்னும் மருத்துவமனைக்கு தேவை என்று தெரிவிக்கப்பட்டது

மருத்துவர்களின் தேவை இருந்தும் சிறந்த நிர்வாகத் திறமை காரணமாக இருக்கின்ற வளங்களைக் கொண்டு மக்களுக்கான சேவைகள் திறம்பட வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தற்போது அங்கு சில மருத்துவ நிபுணர்கள் நியமிக்கப்பட்டு, கிளினிக் வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. இது கிளிநொச்சி வாழ் மக்களுக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதமாகும்.

அதனடிப்படையில் இருதய சிகிச்சை நிபுணர், புற்று நோய் மருத்துவ நிபுணர், மூட்டுவாத மருத்துவ நிபுணர் மற்றும் அஞ்சுரப்பி மருத்துவ நிபுணர் ஆகியோர் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

இதன் மூலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் இதர மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக செல்லும் நோயாளர்கள் எதிர்நோக்கிய பல அசௌகரியங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-6)

# உடைந்து வீழ்ந்த கட்டடத்தின் உரிமையாளர் கைது

கண்டி,செப்.30

கண்டி - பூவெலிகடை பகுதியில் 5 மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்தமை தொடர்பில் கட்டடத்தின் உரிமையாளர் அனுர லெவ்கே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுவரையில் உரிய முறையில் விசாரணைகள் இடம்பெறவில்லை என சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் உறவினர்களும் பிரதேசவாசிகளும் குற்றம் சுமத்திருந்த நிலையிலேயே, இவர் கைதுசெய்யப்பட்டார்.

பூவெலிகட பகுதியில் கடந்த 20 ஆம் திகதி 5 மாடி கட்டடமொன்று இடிந்து வீழ்ந்தது. இந்த விபத்தில் வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் கைக் குழந்தை ஆகியோர் உயிரிழந்தனர். மேலும் இருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர். (ஐ-இ)

# காந்தி ஜெயந்தியும் அகிம்சை தினமும்

கொடிகாமம்,செப்.30

மகாத்மா காந்தியடிகளின் 151 ஆவது ஜெயந்தி தினம் மற்றும் சர்வதேச அகிம்சை தினம் ஆகிய நிகழ்வுகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளன.

அகில இலங்கை காந்தி சேவா சங்கத் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ந.சுந்தரமூர்த்தி, கௌரவ விருந்தினராக கிளிநொச்சி பன்னங்கண்டி அ.த.க பாடசாலை அதிபர் திருமதி ஜெயராணி லோகநாகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

# இலங்கையில் புற்றுநோயால் நாளாந்தம் 64 பேர் பாதிப்பு

**கொழும்பு, செப்.30**
**இலங்கையில் புற்றுநோயால் தினமும் 64 பேர் பாதிக்கப்படுகின்றனர். 38 பேர் உயிரிழக்கின்றனர் எனவும் சுகாதாரத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**



இது தொடர்பில், தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பணிப்பாளர் ஜானகி விதானபத்திரண தெரிவித்ததாவது:
2008 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளது. வாய்வழிப் புற்றுநோயால் 16 சதவீதமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். புற்றுநோயிலிருந்து விடுபடுவதற்கு ஆரோக்கியமற்ற பழக்க வழக்கங்களிலிருந்து விலக வேண்டும்.
மேலும், புற்றுநோயாளிகளை அடையாளம் காண்பதற்கு நாட்டின் அனைத்து முக்கிய மருத்துவமனைகளிலும் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன - என்றார். (ற-இ)

## மீன் வெட்டுவோருக்கு மருத்துவச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், செப்.30
யாழ்ப்பாண மாநகர பிரதேசத்திலுள்ள மீன் விற்பனைச் சந்தைகளில் மீன்களை வெட்டுவோர் உடனடியாக மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.
இது தொடர்பில் சுகாதாரப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:
ஏற்கனவே மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டவர்கள் அவற்றைப் புதுப்பிக்க வேண்டும். அத்துடன் இதுவரை மருத்துவச் சான்றிதழ்கள் எவற்றையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும். சகல மீன் சந்தைகளிலும் மீன்கள் வெட்டும் இடங்களில் அவற்றை வெட்டுவோருக்கு, பொது சுகாதார பரிசோதகர்கள் இந்த அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்றனர்.
மருத்துவச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் சந்தைகளில் மீன்களை வெட்டுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளது. (ற-17)

## சீயோன் தேவாலயத்துக்கு ஜப்பான் தூதுவர் விஜயம்

மட்டக்களப்பு,செப்.30
மட்டக்களப்பு சீயோன் தேவாலய நிலைமைகளை, ஜப்பான் தூதுவர் அத்திரா சுகி நேற்று நேரில் சென்று பார்வையிட்டார். சீயோன் தேவாலயத்தில் குண்டுத் தாக்குதலுக்கு உயிரிழந்தவர்களுக்கு தனது அனுதாபங்களை அவர் தெரிவித்தார்.
மட்டக்களப்புக்கு விஜயம் செய்த ஜப்பான் தூதுவர், மாநகர முதல்வரைச் சந்தித்தார்.
இதன்போது மாநகர சபையின் அபிவிருத்தி மற்றும் வளப்பற்றாக்குறை தொடர்பில் கேட்டறிந்தார்.
தொடர்ந்து உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் இடம்பெற்ற சீயோன் தேவாலயத்துக்குச் சென்று, அங்கு குண்டுத் தாக்குதலால் சேதமடைந்த கட்டடங்களையும், இடைநிறுத்தப்பட்டுள்ள கட்டட நிர்மானத்தையும் பார்வையிட்டார். (க-இ)



## கடலுணவுச் சந்தையிலும் சுகாதார நடைமுறைகள்

கொழும்பு, செப். 30
கடலுணவுகள் ஏலம் கூறும், விற்பனை செய்யும் இடங்களில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.
கடலுணவுகள் வெறும் தரையில் வைத்து ஏலம் கூற முடியாது. அதற்கான பாயில் வைத்தே அவற்றை ஏலம் கூற வேண்டும்.
யாழ். மாநகரப் பிரதேசத்தில் உள்ள சகல மீன் விற்பனை சந்தைகளிலும் சுகாதார விதிகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதற்கு சந்தை வியாபாரிகள் ஏலம் கூறுபவர்கள் போன்றோர் முன்வர வேண்டும்.
கடலுணவுகளை அவற்றுக்கென கட்டப்பட்ட விற்பனை மேடைகளில் வைத்தே விற்பனை செய்ய வேண்டும். சந்தை வளாகத்தில் வெற்றிலை போட்டு உமிழ்ந்து துப்புவது, புகைப் பிடிப்பது போன்றவை தடை செய்யப்பட்டுள்ளன. சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்படும் சந்தை வியாபாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. (வ-17)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் 1,000 ரூபா ஊதியம்!

கொழும்பு, செப். 30
பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பளத்தை வழங்குவதற்கான அறிவிப்பை பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளோம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
அலரிமாளிகையில் நேற்று இடம்பெற்ற ஊடகப் பிரதானிகளுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மஹிந்த மேலும் தெரிவித்ததாவது:
நாம் ஆட்சிக்கு வந்தால் ஆயிரம் ரூபா ஊதியம் தோட்டத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. தற்போது அதற்கேற்ற முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு இது தொடர்பான அறிவிப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ம-இ)



## இருதய நோய் தினத்தில் விழிப்புணர்வு ஊர்வலம்

மட்டக்களப்பு,செப்.30
உலக இருதய நோய் தினத்தை முன்னிட்டு, தெளிவூட்டும் விழிப்புணர்வு ஊர்வலம்,கல்முனையில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.
கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் பணிமனை மற்றும் தொற்றா நோய் பிரிவு என்பன இணைந்து ஊர்வலத்தை ஏற்பாடு செய்தன.
கல்முனை பிராந்திய சுகாதாரப் பணிமனை முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம், பொலிஸ் வீதியினூடாகச் சென்று கல்முனை வடக்கு ஆதார மருத்துவமனை பிரதான வீதி வழியாக, கல்முனை பொதுச் சந்தை வரை சென்று மீண்டும் ஆரம்ப இடத்தை வந்தடைந்தது.
இதன்போது பொது மக்களுக்கு நோய் தொடர்பான துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. (க-இ)

## தென்னைச் செய்கை தொடர்பில் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், செப்.30
தென்னைச் செய்கையை அபிவிருத்தி செய்வது தொடர்பான விழிப்புணர்வு கருத்தமர்வு மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இடம்பெற்றன.
இதன்படி, மன்னாரில் கடந்த வியாழனும் வவுனியாவில் கடந்த வெள்ளியும் இச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன என தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர் தே. வைகுந்தன் தெரிவித்தார். இக் கருத்தமர்வில் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். இதன்போது, மன்னாரில் வெள்ளாங்குளம், பாலியாறு, கணேசபுரம், தேவாநகர் மற்றும் வவுனியாவில் நெடுங்கேணி, நொச்சிமோட்டை, நெடுங்கண்டல் போன்ற இடங்களில் தென்னைச் செய்கையில் ஏற்பட்டுள்ள அடிப்படை பிரச்சினைகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. மேலும், இந்தப் பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளன என்றும் அதனைக் கட்டுப்படுத்தி தருமாறும் பயனாளிகளால் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (வ-17)

## திலீபன் நினைவேந்தல்: அறுவருக்கு அழைப்பாணை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தி.சரவணபவன் உட்பட ஆறு பேரை எதிர்வரும் 2 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு நீதிமன்றம் ஊடாக இவ் அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் வழங்கிய முறைப்பாடு களின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், மாநகர சபை முதல்வர் தி.சரவணபவன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஞா.ஸ்ரீநேசன், சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன் மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் உபதலைவர் நா. சங்க ரப்பிள்ளை ஆகியோருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.
தியாக தீபம் திலீபனை நினைவுகூருமுகமாக இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் விளக்கு ஏற்றும் நிகழ்வை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டமை தொடர்பாக, வழங்கப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. (சு-இ)

# ஆறு கோரிக்கைகளை முன்வைத்து இந்துக்கள் மாபெரும் பேரணி

## வவுனியாவில் நாளை ஏற்பாடு

**வவுனியா,செப்.30**

**இந்துக்கள் எதிர்நோக்குகின்ற முக்கிய பிரச்சினைகளை உள்ளடக்கிய ஆறு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து வவுனியாவில் நாளை வியாழக்கிழமை மாபெரும் பேரணி ஒன்று இடம்பெறவுள்ளது. அனைத்து இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் இந்தப் பேரணி நடைபெறவுள்ளது.**

பேரணியானது காலை 8 மணியளவில் வவுனியா குருமன்காடு காளிகோயில் முன்றிலில் ஆரம்பமாகி, குருமன்காட்டுச் சந்தி ஊடாகச் சென்று, அங்கிருந்து ரயில் நிலைய வீதி ஊடாக நகர மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுரம் சென்று, அங்கிருந்து ஏ-9 வீதியின் ஊடாக மருத்துவமனைச் சுற்றுவட்டத்தை அடைந்து வவுனியா கந்தசுவாமி கோவில் முன்றிலிலே நிறைவடையவுள்ளது என்று இந்து அமைப்புக்களின் சார்பாக சிவஸ்ரீ பிரபாகரக்குருக்கள் மற்றும் தமிழருவி த.சிவகுமார் ஆகியோர் அறிவித்துள்ளனர்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

"இன்றைய காலத்தில் வவுனியா மாவட்டம் மட்டுமல்லாது உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை ஒழுங்குபடுத்தி வவுனியாவில் இருக்கின்ற இந்த அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து பேரணியை முன்னெடுக்கவுள்ளோம். எமது கலை, கலாசாரங்களை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் மட்டுமல்லாது எமது சிறார்களுக்கும் உணர்த்தும் வகையிலேயே அனைத்து இந்து அமைப்புக்களின் ஏற்பாட்டில் இப்பேரணி ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது."பசு வதையை எவ்வடிவிலும் தடுத்தல், அதனைச் சட்டமாக்கக் கோருதல், மதமாற்றத்தைத் தடுத்தல், அதனைத் தடுக்க சட்டமாக்கக் கோருதல், இந்துமதம் சார்ந்த புராதன இடங்கள் எல்லாவற்றிலும் இந்துமதம் சார்ந்தவர்கள் எந்தவித தடையும் இன்றி வழிபாடு செய்வதற்கு ஆவன செய்தல், ஞாயிற்றுக்கிழமைகளில் அறநெறிக் கல்விக்கு முக்கியம் கொடுத்து மற்றைய வகுப்புக்கள், நிகழ்வுகளைத் தடைசெய்து அறநெறியை வளர்த்தல், வவுனியா மாவட்டத்திலே பல வீதிகளுக்கும், கிராமங்களுக்கும் இந்து மதம் சார்ந்த பெயர்கள், காலக் கிரமத்தில் மாற்றப்படுகின்றன. குறிப்பாக வேறு மதம் சார்ந்து, வேறு பெயர் சார்ந்து எங்களுக்கு எதுவிதத்திலும் தொடர்பில்லாத பெயர்கள் வருகின்றன.அவற்றையெல்லாம் நீக்கி இந்துமதம் மற்றும் எங்களுடைய தமிழ்மொழி சார்ந்த பழமைவாய்ந்த பெயர்கள் அப்படியே இருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும், இந்து ஆலயங்கள், நெறிக்கழகங்கள், ஒன்றியங்கள், மன்றங்கள் எல்லோரும் தங்களுடைய அன்றாடக் கடமைகளோடு சமுதாய வளர்ச்சிக்கு சமுதாய தொண்டினை கட்டாயம் செய்ய வேண்டும் என்ற ஆறு அம்சக் கோரிக்கையை முன்னிலைப்படுத்தி இப்பேரணி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது - என்றனர். (ஐ-110)



## ஆசிரியர்களுக்கான செயலமர்வு



சாவகச்சேரி,செப்.30

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தால் தென்மராட்சிவலய பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஒன்று வலயக் கல்வி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான மாணவர்களின் கல்வி நிலையில் காணப்படும் அடைவு மட்டத்தின் காரணத்தைத் கண்டறியும் வகையில் இந்தச் செயலமர்வு நடத்தப்பட்டது.

செயலமர்வில் பாடசாலைகளில் வழிகாட்டலும், ஆலோசனையும் செயற்றிட்டத்துக்கு பொறுப்பான 60 ஆசிரியர்கள் பங்குபற்றியிருந்தனர்.

பாடசாலைகளில் எழுத வாசிக்க இடப்படும் மாணவர்களை எவ்வாறு கல்வித் தரத்தில் உயர்த்துவது தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் சு.சுதோகுமார் மற்றும் பொது சுகாதாரப் பரிசோதகர் ம.பிரபாகரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். சாவகச்சேரி சுகாதார திணைக்களத்தினர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணியகத்தைச் சேர்ந்த மருத்துவர்களுடன் இணைந்து முதற்கட்டமாக கடந்த வாரம் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் தரம் 6 தொடக்கம் தரம் 10 வரையான 77 மாணவர்களிடையே ஆய்வுகளை நடத்தியிருந்தனர். இந்த ஆய்வுகளில் கிடைக்கும் பெறுபேற்றை அடிப்படையாகக்கொண்டு ஏனைய பாடசாலை மாணவர்களுக்கான ஆய்வுகளை நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9,159)

## மழையால் வீடு உடைவு: நால்வர் அருந்தப்பு

சாவகச்சேரி செப், 30

காலநிலை மாற்றம் காரணமாக நேற்றுமுன்தினம் பெய்த கடும் மழையால், வீடு ஒன்றின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்துள்ளது. எனினும் வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர்தப்பினர்.

சம்பவம் சாவகச்சேரி நகரப் பகுதியில், சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. வீட்டுக்குள் மூதாட்டி உட்பட நால்வர் இருந்தனர்.

மழையின் ஒழுக்குக் காரணமாக அவர்கள் சமையல் அறைக்குள் சென்றபோதே வீட்டின் ஒரு பகுதி உடைந்து வீழ்ந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. வீட்டினுள் இருந்த உடைமைகள் சேதமடைந்த போதிலும் அங்கிருந்தவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

(ஐ - 9)



## பாடகர் எஸ்.பிக்கு நினைவேந்தல்

கிளிநொச்சி,செப்.30

மறைந்த பிரபல பின்னணிப் பாடகர் எஸ்.பி பாலசுப்பிரமணியத்தின் நினை வேந்தல் நிகழ்வு நாளை வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் இந்தியக் கொன்சியூலர் பாலசந்திரன் கலந்துகொள்ளவுள்ளார் என்று ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. (ஐ-6)

## சரஸ்வதி சிலை திறப்பு

சாவகச்சேரி,செப்.30

கைதடி சேதுகாவலர் வித்தியாலய வளாகத்தில் அமைக்கப்பட்ட சரஸ்வதி சிலை இன்று புதன்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு திறக்கப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.கணராஜன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.வீ.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய தாபன மற்றும், நிர்வாக அலகின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.அபிராமி, ஓய்வு நிலை அதிபர் க.அருந்தவபாலன் உட்பட பலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

## பொதுக் கூட்டம்

கொடிகாமம்,செப்.30

மட்டுவில் கமலாசனி வித்தியாலய பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அனைத்து பழைய மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு அதிபர் அறிவித்துள்ளார். (ஐ-159)

## இன்று முதல் இலவச உரமானியம்

பூநகரி,செப்.30

நெற்செய்கையில் ஈடுபடும் பூநகரி கமநலசேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு இலவச உரமானியம் இன்று முதல் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. கறுக்காய்தீவு, செட்டியகுறிச்சி ஆகிய பகுதிகளில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு பூநகரி கமநலசேவைகள் நிலையத்தில் வைத்து இன்று வழங்கப்படவுள்ளது. (ஐ-ரி1)

## அனுமதி அட்டை வழங்கல்

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கல்வி கற்கும் உயர்தர மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டை இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

அனைத்து மாணவர்களும் பாடசாலை சீருடை மற்றும் ஒழுக்க விழுமியங்களை பின்பற்றி பாடசாலைக்கு வருகை தருமாறு அதிபர் கி.விக்னராஜா அறிவித்துள்ளார். (ஐ-159)




# ஆலய வரலாறு

எங்கும் நிறைந்த இறைவனை சிறப்பாக ஓர் இடத்தில் இருத்தி சிந்தையைப் புனிதமாக்கி சீரோடு வாழ்வதற்கு எழுந்தவையே ஆலயங்கள். ஈழமணித் திருநாட்டின் சிரம் என விளங்கும் யாழ்ப்பாணத் தீபகற்பத்திலே வடபால் அமைந்த பதி வடமராட்சி. இப்பதியில் பருத்தித்துறைப் பிரதேசத்தில் அமைந்துள்ள புகழ்பூத்த பழமையும் பெற்ற ஆலயம் வல்லிபுர ஆழ்வார் ஆலயம். இவ் ஆலயமானது துன்னாலை, புலோலி வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு அணி சேர்க்கும் முகமாக இக்கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள வல்லிபுரத்தில் அமைந்துள்ளது.

ஆர்ப்பரிக்கும் கடல், வெள்ளை மணற்பரப்பு, பசுமை கொடுக்கும் விருட் சங்கள் என்று இயற்கை அன்னை அரவணைக்கும் இடத்தில் மிளிர்வது சிறப்புக்குரிய தாகும். இத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கமையப் பெற்ற ஒன்றாக மிளிர்வது சிறப்புக்குரிய அம்சமாகும்.

வல்லிபுரம் என்ற பெயருக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் கி.பி. 303 இல் நாகர்களுடைய ஆட்சியும் கி.பி.556 இல் லம்பகர்ணர் ஆட்சியும் நிறைவுக்கு வந்தாக வரலாற்று ஆசிரியர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இப்பகுதிகளில் குடியேறிய படைவீரர்களின் ஆதிக்கம் வளர்ச்சியடையத் தொடங்கிய போது வடமறவர் ஆட்சி செய்த இடமாக வடமராட்சி ; விளங்கியது. ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை கருத்துப்படி தொண்டை நாட்டில் வடக்கில் வசித்த மக்களில் ஒரு பகுதியினர் இங்கு குடியேறியதாகவும், அவர்கள் குடியேறிய பிரதேசத்துக்கு வடமராட்சி எனப் பெயரிட்டதாகவும், தெரிய வருகின்றது. இக்குழுவின் தலைவனாக வல்லிய தேவன் என்பவன் இருந்த தாகவும், எனவே அவன் பெயரைக் குறிக்கும் முகமாக இக் கிராமத்துக்கு வல்லி புரம் என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

இங்கு கடவுள் பக்தியும், செல்வப் பெருக்கும் நிரம்பப் பெற்ற குடும்பத்தில் இலவல்லி பிறந்தாள் அவள் திருமணமாகி குழந்தைப் பேறின்றித் திருமாலை வழிபட்டுவந்தாள். இக் காலத்தில் விஷ்ணு வங்கக்கடலில் மீனவர்க்கு பெரும் தொல்லை கொடுத்துவந்தார். இவ்வேளை இயற்கையை இரசிக்க விரும்பிய இலவல்லி கற்கோவளத்தை அடைந்து கடலில் விளையாடினாள். பின்னர் படகில் ஏறி சிறித தூரம் சென்றாள். அவ்வேளை மீன் ஒன்று அவள் மடியில் பாய்ந்தது. அம்மீன் மடியில் அழகிய குழந்தையாகி சங்கு, சக்கரம் முதலிய வற்றைக் கொண்டதாகவும் காட்சி அளித்தது. இல வல்லியையும் தன் பூர்வீக பலனை எய்தியமை எண்ணி மகிழ்வடைந்தாள். இறுதியில் அம்மீன் சக்கர வடிவத்தை அவளுக்கு அளித்துவிட்டு மறைந்தது.

இலவல்லி மச்சமாய், மகவுமாய் காட்சியளித்த மாயவனால் அருளப்பட்ட சக்கரத்தை வல்லிபுரத்துக்குக்கொண்டு வந்து ஆலயம் அமைத்து வழிபட்டு வந்தாள். இலவல்லியின் ஆழ்ந்த பக்தியின் ஊடாக உருவாக்கப்பட்ட ஆலயம் ஆதலால் வல்லிபுர ஆழ்வார் எனப் பெயர் பெற்ற சிறப்புப் பெற்றது எனலாம்.

இந்த ஆலயத்தின் மூலஸ்தானத்தில் சக்கரமே வைத்துப் பூசை நடைபெறுகின்றது. சூரிய வழிபாட்டிலும் வழிபாட்டுச் சின்னமாக சக்கரம் இடம்பெறுகின்றது. அதே நேரம் வைஷ்ணவர்களால் திருமாலின் சக்கரம் ஆயுதமாகப் ;பூசிக்கப்படுவதும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.


ஆஞ்சநேயர் வழிபாடும் இங்கு சிறப்புப் பெற்றதைக் காணமுடிகின்றது. சமுத்திர தீர்த்தத்தின் போது சக்கரத்துடன் ஆஞ்சநேயரும் எடுத்துச் செல்லப்படுவார். புராதன மக்களுடைய நாகதம்பிரான் வழிபாட்டினையும் இங்கு காணலாம். இவ் ஆலயத்தில் நாகதோஷம் நீங்க நாகதம்பிரானுக்கு பல நேர்த்திக் கடன்களை அடியவர்கள் செய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. நினைத்த காரியங்கள் நிறைவேறவும், திருமணப் பாக்கியம், குழந்தைப் பாக்கியம் வேண்டியும் பல நேர்த்திக் கடன்களை ஆற்றி வேண்டியதை வேண்டியவர்களுக்கு அருளும் காத்தற் கடவுள் விஷ்ணு பகவானும் வீற்றிருக்கும் சிறப்புப் பெற்ற ஆலயமாக மிளிர்கின்றது.










வல்லிபுர ஆழ்வார் தேர்த் திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
ADRIAN SOLAR GREEN
ADRIAN SOLAR GREEN (PVT)LTD
MEGA OFFER
5kW SYSTEM
பொருத்தப்பட்டுள்ள "Solar System"த்தை தேவைக்கேற்ற முறையில் கூடுதலாக்குவதற்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் அனைத்து தொழில்நுட்ப செயற்பாடுகளும் முற்றிலும் இலவசமாக செய்து தரப்படும். இந்த இலவச சேவையானது 5kW முதல் 40kW வரை பொருத்தித்தரப்படும்.
இந்த இலவச சேவை மக்கள் அனைவரிடமும் எடுத்து செல்லவேண்டும் என்பதே எமது நிறுவனத்தின் எண்ணம்
HEAD OFFICE
240,3/1 GALLE ROAD,COLOMBO 06.
0112 36 16 36
0761 36 85 46
JAFFNA BRANCH
351,MAIN STREET, JAFFNA
0212 22 00 91
0764 55 06 69
BATTICALOA BRANCH
226,NEW KALMUNAI ROAD,KALLADY, BATTICALOA.
0652 22 20 92
0773 32 31 64

# வல்லிபுர ஆழ்வார் தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 2020

## புலோலி துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேர், சமுர்த்திர தீர்தோற்சவம்

## தேர் உற்சவம் 30.09.2020, சமுத்திர தீர்த்தம் - 01.10.2020

பருத்தித்துறை புலோலி துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவிலின் தேர் தீர்த்த உற்சவங்கள் முறையே இன்று (2020.09.30) புதன்கிழமை தேர்த்திருவிழாவும் நாளை (01.10.2020) தீர்த்த உற்சவமும் நிகழவுள்ளது. எமது நாட்டினர் மட்டுமல்ல உலகில் பரந்து எமது விஷ்ணுப் பெருமான் அடியார்களும் இங்கு வருகை தருவார்கள்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் மிகவும் தொன்மைமிகு திருத்தலமாகும். முப்பெரும் வீதிகளும், சுற்றே மிகப்பரந்த மணற்பரப்பும் அருகே சற்றுத்தூரத்தில் மகா சமுத்திரமும் சூழ்ந்த திருத்தலத்தில் ஸ்ரீ சக்கராயுதப் பெருமான் மூலஸ்தானத்தில் ஸ்ரீ சக்கரவடிவில் சுயம்பாக எழந்தருளியுள்ளார்.

பருத்தித்துறை கிழக்கே அமைந்துள்ள கடற்பிரதேசத்தில் அருகே சிங்கை நகர் எனும் இராஜதானி அமைந்திருந்தது. இந்த இடம் தமிழர் ராஜ்யமாகவும் துறைமுக நகரமாகவும் இருந்தது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கான சான்றுப் பொருட்களும் மட்பாண்டங்கள் உட்பட பலதும் மீட்கப்பட்டன.

புலோலி வராத்துப்பளை என்னும் கிராமத்தில் வல்லி நாச்சியார் எனும் மூதாட்டி வாழ்ந்து வந்தார். விஸ்ணு பக்தையான இவரிடம் கண்ணன் பிரான் கனவில் தோன்றி கற்கோவளம் பகுதியில் உள்ள கடற்கரைக்கு வா எனக் கட்டளையிட்டார். கற்கோவளம் பகுதி மிக அருகே அமைந்திருந்தது. அங்கு அவர் சேர்ந்ததும் கண்ணன் பாலனாகத் துள்ளி விளையாடியபடி இருந்தவன் மீனாக உருக்கொண்டு வள்ளி நாச்சியார் மடியில் சிறு குழந்தையாக அவள் மடியில் விளையாடியவன் மறைந்து ஸ்ரீ சக்கரமாக உருமாறினான்.

மாயவனின் லீலையில் மக்களும் இதனை அறிந்து கூட சக்கராயுதத்தை அம்மையருடன் சேர்ந்து பல்லக்கில் ஏற்றி வந்த போது ஓர் இடத்தில் இறக்கி வைக்கவும். ஸ்ரீ சக்கராயுதம் அங்கேயே நிலைத்து நின்றுவிட்டது. அந்த இடமே வல்லிபுர ஆழ்வார் குடிகொண்ட மகாவிஸ்ணு கோவிலாகி விட்டது.

எங்கே இறைபக்தி மலர்கின்ற அங்கே இறைவன் குடி கொண்டவனாகின்றான். ஸ்ரீ மத் பகவத்கீதையின் பக்தி யோகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பின்வருமாறு பார்த்தனுக்குக் கூறுகின்றார்.

மய்யேவ மன ஆதத்ஸ்வ மயி புத்திம்நிவேசய
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்தவம் நஸம்சய!!

**- ஸ்ரீமத் பகவத்கீதை பக்தியோகம் -**

என்னிடத்தே மனதை வைத்து என்னிடத்தே புத்தியைச் செலுத்துக பின்பு எண்ணி என்னிடத்தே வசிப்பாய் என்பதில் சந்தேகமே இல்லை. இதனை விட பேறு ஏது? சைவத்தையும் வைஷ்ணவத்தையும் இணைக்கும் இடமாக இன்று மக்கள் எந்தவித பேதமும் இன்றி எல்லா இந்து சமய கோவில்களிலும் வழிபாடு செய்கின்றனர். ஆலய வழிபாடு என்பதே எமது ஆன்மாவை நல் அறிவை சுத்தப்படுத்தும் புனித இடங்களேயாகும். மக்களிடையே பேதமற்ற நிலை வந்தாலே உண்மை நிலையினை அறிய முடியும்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பா வைக்குச் சாற்றி நீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலை பற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்

**- ஆண்டாள் திருப்பாவை -**

ஓங்கி வளர்ந்து உலகங்களைத் தனது திருவடியினால் அளந்தவன் ஸ்ரீமன் நாராயணன் அவன் திருநாமங்களைப் பாடி நோன்பு இருந்தால் நாடு சுவீட்சமாகும். மாதம் மும்மாரி பொழியும் செந்நெல் பயிறுடே கயல் மீன் துள்ளி விளையாடும் பசுக்கள் பாலால் குடங்களை நிரப்பும் அதனால் உலகில் அழிவற்ற செல்வம் நிறையும்.

வல்லிபுர மாயவின் சமுத்திரப்பெரு விழா மிகவும் பக்திபூர்வமானது. இலட்சக்கணக்கான அடியவர்கள் கூடி நிற்பார்கள். கோயிலில் இருந்து சுவாமி ஆஞ்சநேயப் பெருமான் வாகனத்தில், எழுந்தருளி சமுத்திரத்தை அண்மிக்கும் போதே கடல் அலைமேலெழுந்து ஆர்பரிக்கும் வானத்தில் பருந்துகள் அன்றைய தினம் சுற்றிவரும் அழகோ அழகு! புதுமை, மகாபுதுமை!!

மணற்திட்டில் இருந்து பார்த்தால் மக்கள் கூட்டத்தை ரசிக்கமுடியும். செல்லும் பாதையில் புதிய ஒரு உலகி கண்ணனின் லீலை / மனக் கண்முன் துலங்கும். இந்த இடங்களில் தான் எமது முன்னோர்களின் பழமையான சரித்திரங்கள், மக்களின் வாழ்வு முறைகள் எனப் பல விடயங்கள் ஆராய்ப்பட்ட வண்ணமுள்ளன பாரிய பெரிய வெளியில் கண்ணன் ஓங்கி உயர்ந்து நின்று எங்களை பரிபாலிக்கின்றான்.

ஆபாடலாதர மதீர விலோல கேத்த
மாமோத திர்பரித மத்புத காந்தி பூரம்
அவிஸ் மிதாம்ருக மனுஸ் மிகுதிலோப கீயம்
ஆமுத்ரி தானன் மகோஹா மதுரம் முராரே!

**கலா சுதர் அருளிய ஸ்ரீகிருஷ்ணா கர்ணாமிருதம்**
**ஓம் நமோ நாராயண நமஹ**

**பருத்தியூர் பால - வயிரவநாதன்**






# உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உடனடியாக உயர்தர துணி உற்பத்தியை ஆரம்பிக்குக!

## ஜனாதிபதி கோரிக்கை

கொழும்பு, செப்.30

பெரிய மற்றும் சிறியளவிலான உள்நாட்டு உற்பத்தியாளர்கள் உயர் தரத்திலான துணி உற்பத்தியை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை தங்கொட்டுவ தொழிற்பேட்டை, கந்தான கப்புவத்த வேன்காட் நிறுவனம் மற்றும் வத்தளை ஆடை உற்பத்தி நிறுவனங்களுக்கு ஜனாதிபதி கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

இவ் விஜயத்தின்போதே அவர் மேற்படி தெரிவித்தார்.

எதிர்வரும் வருடத்திலிருந்து பாடசாலை மற்றும் பாதுகாப்பு தரப்பினரின் சீருடைகளுக்கு அவசியமான துணிகளை வழங்கும் பொறுப்பில் கூடிய வீதத்தை உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு வழங்குவது தொடர்பாக ஜனாதிபதி தனது அவதானத்தை செலுத்தியுள்ளார்.



உள்நாட்டில் துணியை கொள்வனவு செய்வதன் மூலம் கல்வி அமைச்சுக்கு வருடாந்தம் 80 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான நிதியை சேமிக்க முடியும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

2015க்கு முன்னர் பாடசாலை சீருடை தேவையின் 40 வீதத்திற்கு தமது பங்களிப்பை வழங்கிய கந்தானை, கப்புவத்த வேன்காட் நிறுவனங்கள் தற்போது படுக்கை விரிப்பு மற்றும் துவாய்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. நிறுவனத்தின் முழுமையான உற்பத்தி செயற்பாடுகளை அவதானித்த ஜனாதிபதி அவர்கள் துணிக்கு உள்நாட்டு சந்தையில் நிலவுகின்ற தேவையை நிறைவு செய்யுமளவிற்கு அதன் கொள்ளளவை அதிகரிக்குமாறு நிறுவன முகாமைத்துவத்திற்கு தெரிவித்தார்.


இதேவேளை தமது நிறுவனத்திற்கும் பாடசாலை சீருடை துணிகளுக்கான தேவையில் 30 வீதத்தை வழங்க முடியுமென்று நிர்வாகம் குறிப் பிட்டது. அரசாங்கம் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு வழங்கும் ஒத்துழைப்பை பயன்படுத்தி, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ள முயற்சி செய்யுமாறு அவர்களை ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். இந் நிறுவனம் உற்பத்தி செய்கின்ற தேசிய மற்றும் பௌத்த கொடிகளை பார்வையிட்ட ஜனாதிபதி அவர்கள் கேள்விக்கு ஏற்ற வகையில் உள்நாட்டில் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்குமாறு உரிமையாளரிடம் கூறினார். (ந)



# கடலாமைகளுடன் ஒருவர் கைது

தடைசெய்யப்பட்ட 5 கடலாமைகளுடன் கொழும்புத்துறையில் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேற்படி பகுதியில் தடைசெய்யப்பட்ட கடல் ஆமை விற்பனை செய்யப்படுவதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து, நேற்றுமுன்தினம் அங்குள்ள வீடு ஒன்று விசேட அதிரடிப்படையினரால் முற்றுகையிடப்பட்டது. இதன்போது வீட்டுக்குள் இருந்து ஐந்து கடலாமைகளை உயிருடன் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கடலாமைகளுடன் கைதுசெய்யப்பட்டவர் அதிரடிப்படையினரால் நீரியல்வள திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-20)



# செயற்கை கருவூட்டலில் ஆட்டுக் குட்டிகள்

கொழும்பு, செப்.30

இலங்கையில் முதல் முறையாக செயற்கை கருவூட்டல் மூலம் ஆட்டுக் குட்டிகள் பிறந்துள்ளன.

இலங்கையில் செயற்கை கருவூட்டல் மூலம் வெற்றிகரமாக ஆட்டுக்குட்டிகள் பிறந்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும். அதற்கமைய ஆரோக்கியமான முறையில் மூன்று செயற்கை ஆட்டுக் குட்டிகள் பிறந்துள்ளன.

தேசிய கால்நடை மேம்பாட்டு திணைக்களத்தின் மாதம்பே - ஹொரகெலே பண்ணையில் இந்த மூன்று ஆட்டுக் குட்டிகளும் பிறந்துள்ளன. (ந-இ)

# கொவிட் –19 கட்டுப்படுத்தலில் இலங்கைக்கு இரண்டாமிடம்; ஜனாதிபதி கோத்தா வாழ்த்து

கொழும்பு, செப்.30

கொவிட்-19 அடக்குமுறையின் செயற்பாட்டில் சர்வதேச ரீதியில் இலங்கை இரண்டாம் இடத்தைப் பிடித்தமைக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி தனது பேஸ்புக் பக்கத்தில், சீனாவில் ஜிஹாய் குளோபல் நிறுவனம் நடத்திய ஆய்வு அறிக்கையின்படி , கொவிட்-19 அடக்குமுறை செயற்பாட்டில் சுகாதார, பொருளாதார மற்றும் சர்வதேச உறவுகளில் வெற்றிகரமான நாடாக இரண்டாவது இடத்தில் இலங்கை காணப்படுகின்றது. சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் பிறதுறைகளில் முறையான வள மேலாண்மை மற்றும் அர்ப்பணிப்பு மூலம் அடையப்பட்ட இந்த சாதனைக்கு அந்த அதிகாரிகளுக்கும், முழு இலங்கை மக்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என பதிவிட்டுள்ளார்.



# இன்றைய நாள்

**மேடம்:** வெற்றி கிடைக்கும் நாள். விலை உயர்ந்த பொருள்கள் வாங்குவீர்கள். பணியாளர்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் சற்று கூடுதலாகும்.

**இடபம்:** கனவு நனவாகும். குடும்பத்தின் வசதிகளை மேம்படுத்துவீர்கள். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். உயரதிகாரிகள் உங்களை மதித்துப் பேசுவர்.

**மிதுனம்:** வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் உண்டு. நண்பருடன் ஏற்பட்ட மனஸ்தாபம் நீங்கும். புது வேலை முயற்சி பலிதமாகும். பயணங்களால் ஆதாயம் இருக்காது.

**கடகம்:** உறவினர் விஷயத்தில் தலையிட வேண்டாம். ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பமடைவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை கவனமாக வைத்துக் கொள்ள வேண்டும்.

**சிம்மம்:** வாகன வசதி ஏற்படும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**கன்னி:** பணியாளர்களுக்கு எதிர்பார்த்த உரிமைகள் கிடைக்கும். சிறு மருத்துவ செலவுகள் ஏற்படும். கொடுத்திருந்த தொகை ஒன்று திரும்ப வரும். அதிக வாய்ப்பில்லை.

**துலாம்:** குழந்தைகளால் செலவுகள் உண்டாகும். கோபதாபங்கள் தீரும். பணியாளர்களுக்குக் குறை கள் இருக்கும். எதிர்பாராத சந்திப்பு நிகழும் நன்மைகள் கைகூடும்.

**விருச்சிகம்:** கோதர, சகோதரியால் நன்மை உண்டு. வேற்று மதத்தவர் உதவுவார்கள். குழந்தைகளால் நிம்மதி மீளும். பெருமையான சம்பவம் நிகழும். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள்.

**தனுசு:** விலை உயர்ந்த ஆபரணத்தை கவன்மாகப் பாதுகாக்கவும். இழந்த வாய்ப்புகளைப் பெறுவீர்கள். சுப செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் இருந்த தடை அகலும்.

**மகரம்:** உதவிகள் கிடைத்து நிம்மதியடைவீர்கள். குழந்தைகளின் செயல் ஒன்றால் பெருமிதம் அடை வீர்கள். குழந்தைகள் நற்பெயர் எடுக்கும் நாள். தடைகள் அகலும்

**கும்பம்** காத்திருந்த விஷயம் நல்லபடியாக முடியும். தகராறு செய்தவர்கள் தானாகவே விலகுவர். தெய்வீக சிந்தனை மேலோங்கும்.


**மீனம்:** செயல் ஒன்றைப் பிடிவாதமாகச் செய்து முடிப்பீர்கள். வீடு, வாகன வகையில் பராமரிப்புச் செலவுகளை மேற்கொள்வீர்கள். வெளிநாட்டில் உள்ள குழந்தைகள் நற்செய்தி அளிப்பர்.

# தமிழருக்கு எதிரான அநீதிகளை உடைத்தெறிய ஒன்றுபடுவோம்!

## போராட்டம் சொல்லும் செய்தி அதுவே என்கிறார் சரவணபவன்

**யாழ்ப்பாணம், செப்.30**

**தியாகி திலீபனின் நினைவேந்தலுக்குத் தடைகள் விதிக்கப்பட்டிருந்தபோதும், நீதிமன்றக் கட்டளைகளை மீறாது சாவகச்சேரி சிவன்கோயில் முன்பாக உணவு ஒறுப்புப் போராட்டம் உணர்வுபூர்வமாக நடைபெற்றது. தமிழ்த்தேசியக்கட்சிகள் அனைத்தும்திரண்டு இந்த போராட்டத்தை மேற்கொண்டமை, தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை உடைத்தெறிய தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தங்களுக்கு உள்ள வேறுபாடுகளை மறந்து களமிறங்கத் தயாராகிவிட்டன என்ற செய்தியைச் சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியுள்ளது.**



இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

உணவு ஒறுப்புப் போராட்டத்தைப் போன்று, எமது நிகழ்ச்சிகளுக்கு விதிக்கப்படும் தடைகளையும், ஏனைய தமிழ் மக்கள் மேல் தொடரப்படும் அநீதிகளையும் கண்டித்து நேற்றுமுன்தினம் தமிழர் தாயகத்தில் முழு அடைப்புப் போராட்டம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு நகரமும், ஒவ்வொரு கிராமமும் அமைதி பூண்டு முழுஅடைப்புப் போராட்டத்துக்குத் தாங்கள் வழங்கும் பங்களிப்பின் வீச்சை வெளிப்படுத்தியிருந்தன. வீதிகள் வெறிச்சோடியும், கடைகள் தொழில் நிலையங்கள் பூட்டப்பட்டும், போக்குவரத்துகள் இன்றியும் எங்கும் காணப்பட்ட அமைதி தமிழ் மக்களின் இதயங்களில் கொந்தளித்துக்கொண்டு இருக்கும் உரிமை வேட்கையாக எங்கும் வியாபித்திருந்தது. அது மட்டுமின்றி ஹர்த்தாலானது ஒன்றிணைந்த தமிழ்க் கட்சிகளின் தலைமையில் எமது மக்களும் எமது உரிமைகளுக்காகப் போராட ஐக்கியப்பட்ட சக்தியாக எழுச்சி பெற்றுவிட்டார்கள் என்ற செய்தியை சிங்கள அரசுக்கும், சர்வதேசத்துக்கும் வெளிப்படுத்தியுள்ளது.

செப்ரெம்பர் 26 நிகழ்வுகளும், செப்ரெம்பர் 28 நிகழ்வுகளும் எமது நீதிக்கான போராட்டத்தில் தற்சமயம் ஒன்றிணைந்த சக்தியை வெளிப்படுத்தப்படும் ஓர் ஆரம்பம். இந்த ஆரம்பமானது தொடர்ந்து எம்மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், எமது உரிமைகளைப் பெறுவதற்காகவும் தொடர்ந்து விரிவடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ஜனாதிபதி கோத்தாபய, ஆட்சியதிகாரத்துக்கு வந்த பின்பு அரசியல் அதிகாரம் இராணுவ மயப்பட்டு வருகிறதென்பதை நாம் அறிவோம். பொதுவாகவே சிவில் நிர்வாகத்தின் உயரதிகாரிகளாக ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளும், பணியிலுள்ள இராணுவ அதிகாரிகளும் நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதன் மூலம் எம்மீது திணிக்கப்படும் ஒடுக்குமுறைகளும், இராணுவ மயப்பட்டு மேற்கொள்ளப்படும் அல்லது இராணுவத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் என்பதில் சந்தேகமில்லை. அதேவேளையில் நீதித்துறைகூட பொலிஸாரால் எமது உரிமைகளுக்கு எதிராக வழிநடத்தப்படும் என்பதை திலீபனின் அஞ்சலி நிகழ்வுக்கு விதிக்கப்பட்ட தடை எமக்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

நாம் உரிமையுள்ள இனமாக வாழவும், இன அழிப்பிலிருந்து எம்மைப் பாதுகாக்கவும் ஒன்றுபட்ட உறுதியான தமிழ்த் தலைமைகளின் ஐக்கியத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் ஜனநாயக வழியிலான மக்கள் போராட்டங்களே ஒரே ஆயுதம் என்பதை நாம் உணர்ந்து கொண்டுள்ளோம். எழுச்சிகரமான முழு அடைப்புப் போராட்டத்தை ஆரம்பமாகக் கொண்டு எமது உரிமைப் போராட்டத்தையும் தொடர்ந்து எமக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளையும் உடைத்தெறிந்து நீதிக்கான நெடும் பயணத்தில் முன்செல்வோம் என்பதை ஆணித்தரமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம்.-என்றுள்ளது. (ப)

# தமிழர்கள் என்றைக்குமே தமிழ் தேசியத்தோடுதான்

## மட்டு. மாநகர முதல்வர் தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப்.30

வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் தமிழ்த் தேசியத்தின் பாதையில்தான் தொடர்ந்தும் பயணிக்கின்றார்கள் என்பதை ஹர்த்தால் நடவடிக்கை முழு உலகத்துக்கும் பறைசாற்றியுள்ளது என்று மட்டக்களப்பு மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் தமிழ் மக்களுடைய சுதந்திரமான செயற்பாடுகளைத் தடுப்பதற்கு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. அடக்கு முறைகளின் ஊடாக தமிழர்களை அடிமைத்தனத்துக்குள் வைத்துக்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இந்த நிலையை மாற்றியமைக்கவும், தமிழர்களை அவமதிக்கும் இந்த அரசின் செயற்பாட்டைக் கண்டித்தும் தமிழ்த்தேசியக்கட்சிகள் ஓரணியில் இணைந்து விடுத்த அழைப்பை ஏற்று வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் தமது பூரண ஆதரவை வழங்கியுள்ளனர். இந்த ஜனநாயகப் போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்கிய அனைத்துத் தரப்பினர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்-என்றார். (ப-150)

# முஸ்லிம்களுக்கு நாட்டில் பிரச்சினைகள் கிடையாது

## முஜிபுர் ரஹ்மான் கூறுகின்றார்

கொழும்பு, செப்.30

தற்கொலைத் தாக்குதல் நடத்துமளவுக்கு முஸ்லிம்களுக்குஎந்தப் பிரச்சினையும் நாட்டில் கிடையாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பாக விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழு முன்னிலையில், வாக்குமூலம் வழங்கிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் சாரா எனும் பெண், இந்தியாவில் இருக்கிறார் எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. அவரை உடனடியாக அங்கிருந்து இலங்கைக்கு அழைத்து வர முடியுமாயின் தாக்குதல் தொடர்பில் அனைத்து தகவல்களையும் அறிந்து கொள்ள முடியும்." என்று அவர் மேலும் தெரிவித்தார். (ப-இ)

# தமிழ்த் தேசியமும் முக்கியம்; நிரூபித்துள்ளனர் தமிழர்கள்

## சாணக்கியன் எம்.பி பாராட்டு

மட்டக்களப்பு, செப்.30

தமிழ் மக்கள் அபிவிருத்தியை மட்டும்தான் விரும்புகின்றனர் எனக் கூறியவர்களுக்கு தமிழ்த் தேசியமும் முக்கியம் என்பதை மக்கள் நிரூபித்துள்ளனர் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது;

உண்மையிலேயே எங்களுடைய மக்கள் வழங்கிய பூரண ஒத்துழைப்பைப் பார்க்கின்றபோது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கின்றது. மக்களுடைய மனங்களில் அந்த உணர்வு தற்போது இன்னும் அதியுச்ச அளவில் இருக்கின்றது என்பதனை இந்தக் ஹர்த்தாலின் மூலம் புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. உண்மையிலேயே கடந்த தேர்தலில் பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லியிருந்தாலும், உணர்வு அரசியலுக்கும், தமிழ்த் தேசியத்திற்கும் இனி வடக்கு, கிழக்கில் இடமில்லை. தமிழ் மக்கள் அபிவிருத்தியை மட்டும்தான் விரும்புகின்றனர் எனச் சொன்னவர்களுக்கு, இது அவர்களுடைய முகத்தில் சேறு பூசுகின்ற நிகழ்வாகவே நான் பார்க்கின்றேன். -என்றார். (ப-இ)

# பாதுகாப்புக்காக ரூ.50 மில்லியன்

## இலங்கைக்கு இந்தியா கடன்

கொழும்பு, செப்.30

இலங்கையின் பாதுகாப்புக்கு 50 மில்லியன் ரூபா கடனை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் இந்தியா ஈடுபட்டுள்ளது என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடனடிப்படையில் இலங்கைக்கு ஆயுதத் தளபாடங்களை வழங்குவதற்கான திட்டம் புதுடில்லியிடம் உள்ளது. இலங்கையின் பாதுகாப்புத் தரப்புக்கான பயிற்சிகளை வழங்குவதற்கான திட்டமும் காணப்படுகின்றது. இலங்கைக் கடற்படைக்கு அதன் தேவையை அடிப்படையாகக் கொண்டும் ஆயுதத் தளபாட விநியோகங்களை வழங்குவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது எனத் இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

அத்தோடு இந்தியாவின் வெளிநாட்டுப் பாதுகாப்புத் தரப்பினருக்கான பயிற்சியில் 50 வீதம் இலங்கை கடற்படையினருக்கே ஒதுக்கப்பட்டுள்ளது எனவும் இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது. (ப)

# சம்பிக்கவின் சாரதிக்கு நீதிமன்று பிடியாணை

கொழும்பு, செப்.30

நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வாகனச் சாரதி திலும் துசித்த குமாரவைக் கைது செய்ய கொழும்பு மேல் நீதிமன்றத்தின் நீதிபதி தமித் தொட்டவத்த பிடியாணை பிறப்பித்துள்ளார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ராஜகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, திலும் துசித்த குமார மற்றும் சுதத் அஸ்மடல ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்திருந்தது.

அதனடிப்படையில் குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் வழக்கின் இரண்டாவது சந்தேக நபரான பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் வாகனச் சாரதி திலும் துசித்த குமார நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை இதனையடுத்து குறித்த நபரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது. (ப-இ)



## கட்டுநாயக்க அதிவேக வீதியில் வாகன நெரிசல்

கொழும்பு, செப்.30
கட்டுநாயக்க கொழும்பு அதிவேக பாதையின் சுங்கச் சாவடியில் நேற்றுக் காலை அதிக வாகன நெரிசல் ஏற்பட்டது என்று சாரதிகள் தெரிவித்துள்ளனர்.
கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து கொழும்பு செல்லும் அதிவேக நெடுஞ்சாலையில் பேலியகொட பகுதியில் அமைந்துள்ள சுங்கச்சாவடியிலேயே இவ்வாறு வாகன நெரிசல் ஏற்பட்டது. இதனால் வாகனங்கள் நீண்ட வரிசையில் காத்திருந்த பின்னரே செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது.
எனவே வாகன நெரிசல் ஏற்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து அதன் குறைகளை நிவர்த்தி செய்து விரைவாகப் பயணம் செய்வதற்கான நடவடிக்கையை அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் என்று பயணிகள், சாரதிகள் கேட்டுக்கொண்டனர் (ப-110)

## வீதி அபிவிருத்தியின் அடுத்த கட்டம் ஆரம்பம்

கொழும்பு, செப்.30
ஒரு இலட்சம் கிலோ மீற்றர் வீதியை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தின் மற்றுமொரு கட்டம் நேற்று ஆரம்பமானது. இந்த வேலைத்திட்டத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்று அமைச்சர் நிமல் லன்ஸா தெரிவித்துள்ளார்.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கைப் பிரகடனத்தில் நாட்டில் உள்ள ஒரு இலட்சம் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய நாட்டின் பிரதான மார்க்கங்களுடன் ஒன்றிணையும் குறுக்கு வீதிகள் மற்றும் பிரதான வீதிகளை உடனடியாக அபிவிருத்தி செய்யுமாறு ஜனாதிபதி பெருந்தெருக்கள் அமைச்சிடம் பொறுப்புக்களை வழங்கியுள்ளார். அதன் ஒரு கட்டமாக நேற்றையதினம் ஹோமாகம தொகுதியில் வீதியின் சீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதேவேளை இவ்வருடத்திற்குள் ஒரு தொகுதியில் 50 கிலோ மீற்றர் வீதியைச் மறுசீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் நிமல் லன்ஸா தெரிவித்துள்ளார். (ப-இ)

### இலங்கையின் போக்கு மாறாவிட்டால்,

# தனித் தமிழீழம் அமைக்க இந்தியா உதவவேண்டும்

## பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து

**கொழும்பு, செப்.30**
**சர்வதேச அமைப்புகளின் விவாதங்களில், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா எடுக்க வேண்டும், அதன் பிறகும் இலங்கையின் போக்கு மாறாவிட்டால், இறுதித் தீர்வாக ஐக்கிய நாடுகள் அவையின் மூலம் தனித் தமிழீழம் அமைக்க உலகம் முழுவதும் ஈழத்தமிழர்களிடம் பொதுவாக்கெடுப்பு நடத்த இந்தியா ஏற்பாடு செய்யவேண்டும். என பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.**

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது;
இந்தியா இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகள் குறித்து இரு நாடுகளின் பிரதமர்களும் கடந்த 26ஆம் திகதி இணையவழியில் பேச்சு நடத்தினர். அப்போது, இலங்கை அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளித்தல், போருக்குப் பிந்திய சமாதான முயற்சிகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் ஒன்றுபட்ட இலங்கைக்குள் ஈழத் தமிழர்கள் சமத்துவம், நீதி, அமைதி, மரியாதை ஆகியவற்றுடன் வாழ வகை செய்ய வேண்டும் என்று இலங்கைப் பிரதமர் ராஜபக்சவை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார். அதையேற்ற இலங்கைப் பிரதமர் ராஜபக் ஷ, இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளை முழுமையாகச் செயல்படுத்துவதன் மூலம் தமிழர்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றத் தமது அரசு நடவடிக்கை எடுக்கும் என மோடியிடம் உறுதியளித்து இருந்தார்.
ஆனால், இந்தியப் பிரதமருடனான பேச்சுகளுக்குப் பிறகு இலங்கை அரசு வெளியிட்ட அறிக்கையில், ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிப்பது குறித்தோ, இலங்கை அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது சட்டத் திருத்தத்தை முழுமையாகச் செயல்படுத்துவது குறித்தோ எந்த வாக்குறுதியும் அளிக்கப்படவில்லை என்பது அதிர்ச்சி அளிக்கிறது.
எனவே, இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை, மனித உரிமை மீறல்கள், ஈழத்தமிழர்களுக்கு போதிய அதிகாரம் வழங்குதல் ஆகியவற்றில் இந்தியா கடுமையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். பன்னாட்டு அமைப்புகளில் இது குறித்த விவாதங்களும், விசாரணைகளும் வரும்போது, இலங்கைக்கு எதிரான, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா எடுக்க வேண்டும் என்றுள்ளது. (ப)

## புதையல் தோண்டிய குற்றச்சாட்டு: மூன்று பேர் கைது!

கொழும்பு, செப். 30
அரலங்வில பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பில் புதையல் தோண்டினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு சந்தேக நபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
அரலங்வில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொக்குண பகுதியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளிலேயே குறித்த சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து புதையல் தோண்டப் பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் உழவு இயந்திரம் ஆகியன கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் குறிப்பிட்டனர். நெலும்வெள பகுதியைச் சேர்ந்த 44, 48 மற்றும் 20 வயதுகளையுடைய நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ப-இ)

## காதலிக்கு கத்திக்குத்து; காதலன் உயிர்மாய்ப்பு

காதலித்த பெண்ணின் வீட்டுக்காரர் திருமணத்துக்கு தடைபோட்டதால் அந்தக் காதலியையும் அவரின் தந்தையையும் கத்தியால் குத்திவிட்டு தானும் உயிர் மாய்த்துள்ளார்.
இந்தச் சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட காரைதீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.
இது குறித்து மேலும் தெரியவருவததாவது:
மட்டக்களப்பிலுள்ள ஆடைகள் தைக்கும் நிறுவனம் ஒன்றில் கடமையாற்றும் 29 வயதான பெண்ணுக்கும், அதே நிறுவனத்தில் பணியாற்றும் குடும்பஸ்தர் ஒருவருக்கும் இடையே காதல் தொடர்பு ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே திருமணமாகி விவாகரத்து பெற்றிருந்த அந்தப் பெண்ணுக்கு 5 வயதில் ஒரு குழந்தை உண்டு..அதே போன்று அவரோடு காதல் கொண்ட நபருக்கும் திருமணமாகி 12 வயதான பிள்ளை உள்ளது. ஆனால் தனக்கு திருமணமான விடயத்தை மறைத்தே அவர் அந்தப் பெண்ணை காதலித்துள்ளார்.
ஆயினும் பின்னர் அவருக்கு திருமணமாகி பிள்ளையும் இருக்கும் விடயம் காதலியின் வீட்டாருக்கு தெரியவந்துள்ளது. இதனால் அவர் விவகாரத்து செய்துவிட்டு வந்தாலேயே தன்னை திருமணம் செய்யலாம் என்று காதலி நிபந்தனை விதித்துள்ளார். இதனால் ஆத்திரமுற்ற அந்த நபர் காரைதீவில் உள்ள காதலியின் வீட்டுக்குள் புகுந்து காதலியையும் அவரது தந்தையும் கத்தியால் குத்தி விட்டு தப்பியோடியுள்ளார்.பின்னர் தனது உயிரையும் அவர் உயிரைமாய்த்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
படுகாயமடைந்த பெண்ணும் அவரது தந்தையும் சிகிச்சைக்காக கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குடும்பஸ்தரின் சடலம் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ப)

## இனி அதிகாலையில் மருத்துவ சோதனை

கொழும்பு, செப்.30
நாட்டில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் அலுவலகங்களை அதிகாலை 5.30 மணிக்குத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சேவை பெறுநர்கள் அதிகாலை 5.30 மணி முதல் மருத்துவ பரிசோதனைக்கான சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என தேசிய போக்குவரத்து மருத்துவ நிலையத்தின் தலைவர், எஸ். கமகே தெரிவித்தார்.
"எதிர்வரும் 2 மாதங்களுக்குள் நாடு முழுவதும் இந்த செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. குருநாகல், புத்தளம், கண்டி, அநுராதபுரம், நுகேகொடை உள்ளிட்ட பகுதிகளில் உள்ள அலுவலகங்களில் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாவட்டங்களில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிலைய அலுவலகங்களிலும் இந்த செயற்றிட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. " என்று கமகே மேலும் தெரிவித்தார். (ப-இ)

## மண் சரிவு எச்சரிக்கை

இரத்தினபுரி, செப்.30
நாட்டில் சில பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதால் மக்களைப் பாதுகாப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.
இரத்தினபுரி குருவிட்ட பிரதேசத்திற்கும் , கேகாலை தெஹியோவிட்ட பிரதேசத்திற்குமே இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்தப் பகுதி மக்களைப் பாதுகாப்புடன் இருக்குமாறும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. (ப-இ)

# வரலாற்றுப் பெருமைமிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்

சிவரம்யா





ஈழத்தின் மிகப் புராதன விஷ்ணு ஆலயங்களுள் ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம் முக்கியமானதாகும். யாழ்ப்பாணம் வடமராட்சி, பருத்தித்துறைப் பிரதேசத்தில் துன்னாலை புலோலி, வராத்துப்பளை, கற்கோவளம் ஆகிய கிராமங்களுக்கு மத்தியில் இருப்பது வல்லிபுரக் கிராமமாகும். பருத்தித்துறையிலிருந்து ஏறக்குறைய நான்கு மைல் தூரத்தில் இந்தக் கிராமம் காணப்படு கின்றது.

அழகிய வெண்மணற்பரப்பு, ஆர்ப்பரிக்கும் அலை யோசை, நிழல்தரு விருட்சங்கள் ஆகியவற்றின் மத்தியில் ஓங்கி உயர்ந்து, கம்பீரமாகக் காட்சி தருகின்றது ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயம்.

வரலாற்றுப் பெருமைமிக்க இவ்வாலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றும் ஒருங்கமைந்த பிரசித்திபெற்ற புராதனத் திருத்தலமாகக் காணப்படுகின்றது.

கடற்கரையில் துள்ளி விளையாடிய மீனானது திடீரென துள்ளி மேலெழுந்து, கடற்கரையில் அமைந்திருந்த பெண்ணின் மடியிலே விழுந்ததும் ஓர் அழகிய ஆண் குழந்தையாக மாறியது. பின்னர் பெண்ணின் மடியிலிருந்த குழந்தை மறைந்து, ஒரு சக்கராயுதம் இருந்தது. தொடர்ந்து அசரீரி ஒன்று ஒலித்தது.

"அன்பர்களே இலவல்லி என்கின்ற இந்தப் பெண்ணின் நாகசாபம் இன்றோடு நீங்கியது. ஆலயம் ஒன்றை அமைத்து இந்தச் சக்கரத்தை இவ்விடத்தில் பக்திபூர்வமாகப் பிரதிஷ்டை செய்து, தினசரி வழிபாடுகள் மிகவும் நேர்த்தியான முறையில் செய்து வாருங்கள். இங்கு வழிபடும் அடியார்களுக்கு நாகசாபம் நீங்கும். இவ்வாலயப் பெருமையை கேட்பவர்கள், படிப்பவர்கள், கூறுபவர்கள் அனைவரும் நற்கதி, நற்பேறு உண்டாகும்" என்று கூறியது. இது வரலாறு.

ஆலயத்தின் மகோற்சவமானது இந்த மாதத்தில் அமாவாசை தொடர்ந்து கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. 14 ஆம் திருவிழா சப்பரம், 15 ஆம் திருவிழா தேர், 16 ஆம் திருவிழா சமுத்திரத் தீர்த்தம், 17 ஆம் திருவிழா கேணித் தீர்த்தம் ஆகியன நடைபெறுகின்றமை சிறப்பு. ஞாயிற்றுக்கிழமையே வல்லிபுர ஆழ்வாருக்குச் சிறப்பான நாளாகக் கொண்டாடப்படுகின்றது. மூலஸ்தான, பரிவாரமூர்த்திகளுக்கான மண்டபங்கள் யாவும் கண்கவர் சிற்ப வேலைப்பாடமைந்தவை. மூன்று வீதிகளைக் கொண்டதும் இராஜகோபுரம் அமைந்ததும் மேலைக் கோபுரம் உள்ளதுமான பெருங்கோவில் என இந்தத் திருத்தலம் அமைந்துள்ளது.

மூலஸ்தானத்திலே சக்ராயுதம் வைத்து பூசிக்கப்படுகின்ற மிகப் பழமையான சந்நிதானமாக ஸ்ரீ வல்லிபுரக் கோயில் உள்ளது.

## மாயவனே...

வண்ணத் தேரேறி
வருகிறான் மாயவன்
வல்லிபுரப் பதியுறையும்
மாயவனே!
எல்லையில்லாக் கருணையின்
தாயவனே
வேண்டுவோர்க்கு அருள் புரியும்
வல்லிபுரநாதா!
கருட வாகனனே
கார்மேக வண்ணா!
பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமா!
பக்தர்களைக் காத்திட
பத்து அவதாரம் எடுத்தாய்
பாண்டவர்கள் துயர்நீக்க
பார்த்தனாய்ச் சென்றாய்
பண்பாட்டுடன் வாழ்ந்த
எம் தமிழினம் –இனியாவது
பார்தனில் சிறப்புடன் வாழ்ந்திட
அதர்மங்கள் புரிவோரை
அடியோடு அழித்துவிடு
மாயவா!
சாந்தி, சமாதானம்
மனிதநேயம் மீண்டும்
நாட்டில் மலர்ந்திட
உன்னிடத்தில் சரண்புகுந்தோம்
நிம்மதியைத் தந்துவிடு
மாயவா!

நயினை விசு. இராசநாயகம்.

## வல்லிபுரத்தாழ்வார் தேரினில் வருகின்றார்!

அலை கடற்கரையினில்
கலையொளிர் கோவிலில்
வளருமெம் வல்லிபுரநாதர்
வருகின்றார்!
கலையொளிர் கோவிலில்
அமர்ந்தருள் பொழியுமெம்
வல்லிபுரத் தாழ்வார்
வருகின்றார்!!

அன்பர்கள் நாங்கள்
இழுந்து வருகின்ற
தேரினில் ஆழ்வார்
வருகின்றார்!
ஆடி அசைந்து வரும்
நெடுந்தேரினிலே
வல்லிபுரத்தாழ்வார்
வருகின்றார்!

மணிகள் ஒலித்திட
உருண்டோடி வருகின்ற
தேரினிலிலமர்ந் தாழ்வார்
வருகின்றார்!
வாழைகள் கரும்பு
போன்றவற்றாலே
எழில் பெற்ற தேரேறி
வருகின்றார்!!
கலையொளிர் எழில்மிகு
தேரினிலிலர்ந்து
வல்லிபுரத் தாழ்வார்
வருகின்றார்!
அலைபுரள் எழில் மிகு
தேரினிலிலர்ந்து
வல்லிபுரநாதா
வருகின்றார்!!

எங்கள் தடையும்
யாவும்
நீக்கும் வண்ணம்
ஆழ்வார் தேரேறி
வருகின்றார்!
எங்கள் இடர் எல்லாம்
தொலையும் வண்ணம்
ஆழ்வார் தேரினில்
வருகின்றார்!!

தமிழர் வாழ்விங்கு
மலரும் வண்ணம்
தேரினில் ஆழ்வார்
வருகின்றார்!
தமிழர் தலைகள்
நிமிரும் வண்ணம்
தேரினில் ஆழ்வார்
வருகின்றார்!!
தரணியெங்கும்
தமிழ்மொழி ஒலித்திட
வல்லிபுரநாதர்
வருகின்றார்!
தாரணியெங்கும்
தமிழ் நன்கு செழித்திட
வல்லிபுரத்தாழ்வார்
வருகின்றார்!

தமிழரின் நலங்கள்
உயர்ந்திட வேண்டி
ஆழ்வார் தேரேறி
வருகின்றார்!
தமிழரின் பலங்கள்
சிறந்திட வேண்டி
ஆழ்வார் தேரினில்
வருகின்றார்!

தமிழரின் ஆட்சி
வளர்ச்சி பெற வேண்டி
வல்லிபுரநாதர் வருகின்றார்!
தமிழரின் ஆட்சி
உயர்ச்சி பெற வேண்டி
வல்லிபுரநாதர்
வருகின்றார்!

தமிழரின் உரிமைகள்
கைப்படவேண்டி
வல்லிபுரத்தாழ்வார்
வருகின்றார்
தமிழரின் பெருமைகள்
மெய்ப்பட வேண்டி
வல்லிபுரத்தாழ்வார்
வருகின்றார்!

எங்கள் கலைகள்
செழுமைபெறல் வேண்டி
ஆழ்வார் தேரேறி
வருகின்றார்!

எங்கள் கலைகள்
எழுச்சிபெறல் வேண்டி
ஆழ்வார் தேரேறி
வருகின்றார்!

தமிழரெம் மாட்சிமை
உயர்ச்சி பெற என்றும்
வல்லிபுரத்தாழ்வார்
துணை யிருப்பார்!
தமிழரெம் ஆளுமை
உயர்ச்சி பெற என்றும்
வல்லிபுரத்தாழ்வார்தம்
அருள் சுரப்பார்!

- முருகு





# பிரிட்டன் தூதுவர் - சபாநாயகர் சந்திப்பு

கொழும்பு, செப்.30

பிரிட்டனின் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் இடம்பெற்றுள்ளது.

இதில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவும் கலந்துகொண்டார்.

இரு தரப்புக் கலந்துரையாடலின் பின்னர், உயர்ஸ்தானிகருக்கு சபாநாயகர் தேநீர் விருந்துபசாரமொன்றையும் வழங்கினார். (ற-இ)

# இலவச பல் வழங்க இலங்கையில் திட்டம்

கொழும்பு, செப்.30

இலங்கையில் பற்களை இழந்த மக்களுக்கு இலவச பல் வழங்கும் திட்டத்தைத் தொடங்குவதற்கு சுகாதார அமைச்சகம் கவனம் செலுத்தியுள்ளது. சுகாதார அமைச்சகம் நடத்திய ஆய்வில், 65 வயதுக்கு மேற்பட்டவர்களில் 20 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு பல் இல்லை என்பது தெரியவந்துள்ளது.

தற்போது அரச மருத்துவமனைகளில் பல் பிரித்தெடுக்கும் திட்டம் இன்மையால் மக்கள் பல் பிரித்தெடுக்க தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றமையால் அவர்களுக்கு அதிக செலவு ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே பற்களை இலவசமாக வழங்குவதற்கான முன்மொழிவு செய்யப்பட்டுள்ளது என்று அரச பல் அறுவைச் சிகிச்சை சங்கத்தின் செயலாளர் டாக்டர் விபுலா விக்ரமசிங்க தெரிவித்தார். (ற-இ)

# பாலத்தில் விபத்து: உயிர் தப்பிய மதகுரு

கிளிநொச்சி, செப்.30

கிளிநொச்சி - பரந்தன்- முல்லைத்தீவு வீதியில், கண்டாவளைச் சந்தி வெளிக்கண்டல் பாலத்துக்கு அருகில், வாகன விபத்து ஒன்று நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

இதில் வாகன சாரதியான இந்து மதகுருவும், ஏனையவர்களும் அதிஷ்டவசமாக காயங்கள் எதுவுமின்றி தப்பியுள்ளனர்.

வாகனம் ஏ-35 வீதியில் பரந்தன் நோக்கி பயணித்துக் கொண்டிருந்த போது மழை காரணமாக வெளிக்கண்டல் பாலத்தில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து பள்ளத்திற்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. (ற-21)

## போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வாக

# 100 குளிரூட்டப்பட்ட பஸ்கள் இறக்குமதி

### தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தகவல்

கொழும்பு, செப்.30

**கொழும்பு மற்றும் அதன் புறநகர்களின் போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக தாழ்வான படிகளைக் கொண்ட 100 குளிரூட்டப்பட்ட பஸ்களை இறக்குமதி செய்ய அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பஸ்கள் கிடைத்ததும் அதில் 10 வீதமானவற்றை பஸ் ஒழுங்கைகளில் சேவையில் ஈடுபடுத்துவதுடன், பழைய பஸ்களை சேவையிலிருந்து அகற்றி தற்போதுள்ள பஸ் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை சேவைகளில் இருந்து அகற்றாமல் அவர்கள் புதிய பஸ்களுக்கு நியமிக்கப்படுவார்கள்.

இந்த நிலையில் பஸ்களை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் ஒப்புதல் மாத்திரமே தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. சீனாவின் இந்த பஸ்கள் 80 பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டவை. சுமார் 12 முதல் 13 மில்லியன் ரூபா வரையான விலையில் அவற்றை கொள்வனவு செய்ய முடியும்.

புதிய பஸ்களை சேவைகளில் ஈடுபடுத்தியவுடன், பலரும் தங்கள் சொந்த வாகனங்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பஸ்களைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும். காலையிலும், மாலையிலும் அலுவலகப் பயணிகளை இலக்காகக் கொண்டு இந்தப் பஸ்கள் இயக்கப்படும். இரவு 11 மணி வரை வேலை செய்பவர்களுக்கு வசதியாக அந்த பஸ்கள் இரவிலும் சேவையில் ஈடுபடுத்தப்படும். இந்த பஸ்களில் ரிக்கெட்டுகளை வழங்குவதற்கு நடத்துநர்கள் இருக்கமாட்டார்கள். கணினி மின்னணு முறையிலேயே ரிக்கெட்டுகள் வழங்கப்படும்-என்றார். (ற-இ)

## கனவை பயங்கரமாக்கும்

# கொரோனா

### ஆய்வுமூலம் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப்.30

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் உடலில் பல உறுப்புகள் பாதிக்கப்படுகின்றமையுடன், அவர்களுடைய மனநிலையிலும் நிறைய மாற்றங்கள் உருவாகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக அவர்கள் கனவு காண்பதில் கூட அசாதாரண நிலை நிலவுகின்றது. இதனால் அவர்களுக்கு மோசமான கனவுகள் அதிகமாக வருகின்றமை ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது. அமெரிக்காவைச் சேர்ந்த மனநல நிபுணர்கள் சங்கம் மேற்கொண்ட ஆய்வு ஒன்றின் மூலமே இது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வு கொரோனாப் பாதிப்புக்குள்ளாகிய 2,888 பேரிடம் மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர்கள் கொரோனாப் பாதிப்பு ஏற்படுவதற்கு முன்பு இருந்ததை விட தற்போது அவர்களுக்கு மோசமான கனவுகள் அதிகமாக வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சொந்தங்களால் கை விடப்படுதல், வேலையிழப்பு, பண இழப்பு மற்றும் பயங்கர பாதிப்பு போன்றவை தொடர்பாக மோசமான கனவுகள் அதிகமாக வருகின்றமை ஆய்வில் தெரியவந்துள்ளது. குறிப்பாக பெண்களுக்கு இதுபோன்ற கனவுகள் மிக அதிகமாக வருவதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ற-இ)



# வெளிநாட்டு உணவுகள் வழியாக கொரோனா வைரஸ் பரவாது

### தலைமை தொற்று நோயியல் நிபுணர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.30

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுகள் வழியாக கொரோனா வைரஸ் பரவாது என்று தொற்று நோயியல் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்திய கலாநிதி சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பொருள்கள் வழியாக வைரஸ் பரவும் அபாயம் இல்லை. கொரோனா வைரஸ் ஒருவரின் சுவாச மண்டலத்திற்குள் நுழையும் போது மட்டுமே அவருக்கு பாதிப்பு ஏற்படுகிறது. அத்துடன் ஒருவர் வைரஸ் கொண்ட ஒரு மேற்பரப்பு அல்லது பொருளைத் தொட்ட பின்னர், கண்கள், மூக்கு அல்லது வாயைத் தொடும்போதே வைரஸ் பரவுகிறது. பொருள் ஒன்றின் மேற்பரப்பில் அல்லது பொருளில் மூன்று நாள்கள் மட்டுமே வைரஸினால் தங்கியிருக்க முடியும். எனவே, உணவை உட்கொள்ளும்போது வைரஸ் சுவாச மண்டலத்துக்குள் நுழைவதற்கான வாய்ப்பு குறைவு-என்றார். (ற-இ)

# மாணவியின் சடலம் ஆற்றிலிருந்து மீட்பு



கொழும்பு, செப்.30

மர்மமான முறையில் உயிரிழந்த மாணவியொருவரின் சடலம் நானுஓயாவிலிருந்து நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நானு ஓயா எடின்பரோ தமிழ் வித்தியாலயத்தில் தரம் 10 இல் கல்வி கற்கும், மகேந்திரன் யசோதா என்ற மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த மாணவி நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணிவரை கல்வி நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். வீட்டில் உள்ளவர்கள் நித்திரைக்கு சென்றுவிட்டனர். பின்னர் அவர்கள் அதிகாலை 2.30 மணியளவில் எழுந்துபார்க்கும் போது அந்த மாணவியைக் காணவில்லை. இதனையடுத்து தாயார் நானுஓயா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த நிலையில் நேற்றுக் காலை தோட்டத் தொழிலாளர்கள் சிலர் கொழுந்து கொய்வதற்கு சென்று கொண்டிருக்கையில், வீட்டுக்கு அருகில் உள்ள ஆற்றில் அவர் சடலமாகக் கிடப்பதைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர். நுவரெலியா மாவட்ட நீதிபதி மரண விசாரணைகளை மேற்கொண்ட பின்னர், பிரேதப் பரிசோதனைக்காக சடலம் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சம்பவம் குறித்து நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-இ)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்க பாலியல் கல்வியே சிறந்த வழி

## நீதி அமைச்சர் தெரிவிப்பு



**கொழும்பு, செப்.30**
**சிறுவர் துஷ்பிரயோகத்தைத் தடுப்பதற்கு பாலியல் கல்வியே சிறந்த வழி என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

குழந்தைகளின் உரிமைகள் என்ன, வரம்புகள் என்ன என்பதை நாங்கள் சிறுவர்களுக்கு கற்பிக்க வேண்டும். சமூக நீதி, பாதுகாப்பு, பெற்றோர் குழந்தைகள் இருவருக்கும் கல்வி மற்றும் நல்ல சட்ட நிர்வாகம் மற்றும் சட்டத் தீர்வுகளை அமுல்படுத்துதல் என்பவற்றின்மூலம் சிறுவர் துஷ்பிரயோகத் தடுப்பு நடவடிக்கைகளை கையாள வேண்டும். பாடசாலைப் பாடத்திட்டத்தில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்த கல்வி அமைச்சுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருக்கின்றோம். நாங்கள் சட்டத்தரணிகள் சங்கத்தில் இருந்தபோது, மாணவர்களுக்கு சட்டம் கற்பிக்கப்பட வேண்டும் என்று வாதிட்டோம். அதன்படி, க.பொ.த சாதாரண தர, உயர்தர மாணவர்களுக்கு சட்டத்தை ஒரு பாடமாக சேர்க்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. சில பாலியல் கல்வி, குழந்தைகளுக்கு தேவைப்படுகிறது.

பாலியல் கல்வியைஅநேகமாகதரம் 6 முதல் அல்லது குறைந்தபட்சம் தொடங்குவதற்கு ஏதேனும் வழியுள்ளதா என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# கழிவுக் கொள்கலன்களை திருப்பி அனுப்பியமைக்கு சொல்ஹெய்ம் பாராட்டு

கொழும்பு, செப்.30
கழிவுப்பொருள்கள் அடங்கிய 21 கொள்கலன்களை பிரிட்டனுக்கு திருப்பி அனுப்பியமைக்கு நோர்வேயின் முன்னாள் இராஜதந்திரி எரிக் சொல்ஹெய்ம் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சர்வதேச ஆங்கில ஊடகமொன்றில் வெளியான செய்தியை மேற்கோள்காட்டி அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். அதில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

இலங்கைக்கு சட்டவிரோதமாக அனுப்பி வைக்கப்பட்ட கொள்கலன்களில் அபாயகரமான பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டமையையடுத்து அவை மீண்டும் பிரிட்டனுக்கே திருப்பி அனுப்பப்பட்டிருக்கின்றன.

அமெரிக்காவும் ஐரோப்பாவும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு கழிவுப்பொருள்களை அனுப்பி வைப்பதை உடனடியாக நிறுத்தவேண்டிய தருணம் இதுவாகும் என்று குறிப்பிட்டுள்ளார். (வ-இ)

# நியூ டைமன்ட் கப்பல்: எண்ணெய்க் கசிவால் கடலாமைகளுக்கு ஆபத்து

கொழும்பு, செப்.30
நியூ டைமன்ட் கப்பலிலிருந்து எண்ணெய்க் கசிவு ஏற்பட்ட இடத்தை அண்மித்த பகுதியில் காணப்படும் கடலாமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இந்தத் தகவலை தேசிய நீர் வழங்கல் ஆராய்ச்சி அபிவிருத்தி முகாமை நிறுவனம் (நாரா) தெரிவித்துள்ளது. அந்த பகுதிகளிலுள்ள கடலாமை களின் செயற்பாடுகளில் மாற்றங் கள் ஏற்பட்டுள்ளமையை தமது குழுவினர் அவதானித்துள்ளனர் என வும் நாரா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (வ-இ)

# துறைமுக ஊழியர்களுடன் தொடர்பு; மேலும் 34 பேர் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, செப்.30
கொழும்புத் துறைமுக பணியாளர்களுடன் தொடர்பிலிருந்த மேலும் 34 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது:

இந்திய எண்ணெய்க் கப்பலில் வந்த 17 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை அண்மையில் உறுதி செய்யப்பட்டது. அந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு சென்றமை தொடர்பில் துறைமுக அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதனைத் தொடர்ந்து, தங்கள் குடும்பத்தவர்களுடன் தொடர்பிலிருந்த ஐவர் உட்பட கப்பலில் ஏறிய அனைவரையும் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், இவர்களுடன் தொடர்பிலிருந்த 34 பேரை தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இவர்கள் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது ஒருவாரத்துக்குள் தெரிய வரும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)



# சுனாமியில் தொலைந்த மகனை 16 ஆண்டுகளின் பின் மீட்ட தாய்

அம்பாறை, செப்.30
சுனாமியில் காணாமல்போன மகனை 16 வருடங்களுக்கு பின்னர் தாயொருவர் கண்டுபிடித்த சம்பவம் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு பகுதியைச் சேர்ந்த அபுசாலி சித்தி ஹமாலியா என்ற தாயின் 5 வயது மகன் சுனாமியில் காணாமல் போயுள்ளார். அதிலிருந்து மனநோயாளியாக தினமும் வாழ்ந்து வந்த அவர் தனது இடைவிடாத முயற்சியினால் தொலைந்த மகனைக் கண்டுபிடித்துள்ளார்.

எனது மகனை 16 வருடங்களுக்கு பின்னர் அடைந்து விட்டேன் இதற்காக இறைவனுக்கு நன்றி சொல்கிறேன் என அந்தத் தாய் தெரிவித்துள்ளார். (வ-இ)

# இதயம் சார்ந்த நோய்களால் நாளாந்தம் 100 பேர் சாவு

## இதய நோய் தடுப்புப் பிரிவு தகவல்

கொழும்பு, செப்.30
இதயம்சார் நோய்களால் நாளொன்றுக்கு 100 பேர் நாட்டில் உயிரிழக்கின்றனர் என இதயம்சார் நோய் விசேட தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. அந்தப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளதாவது:

தொற்றா நோய்களால் உலகளாவிய ரீதியில் 83 சதவீத மரணம் ஏற்படுகிறது. இவ்வாறு ஏற்படும் மரணத்துக்கு பிரதான காரணியாக இருப்பது இதயம் மற்றும் இரத்தக் குழாயுடன் தொடர்புடைய பிரச்சினைகளாகும்.

இதனால் உலகளாவிய ரீதியில் வருடமொன்றுக்கு 17.9 மில்லியன் உயிரிழப்புக்கள் பதிவாகின்றன என கண்டறியப்பட்டுள்ளது. இலங்கையில் மொத்த சனத்தொகையில் 26.5 சதவீதமானோர் அதிக இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் அதிக இரத்த அழுத்தம் உள்ளமை உறுதிப்படுத்தப்பட்ட நோயாளர்களில் 35 சதவீதமானோர் உரிய முறையில் மருந்துகளை உட்கொள்வதில்லை என்பதோடு, 30 சதவீதமானோர் தமக்கு அதிக இரத்த அழுத்தம் உள்ளது என்பதையே அறியாமலுள்ளனர்.

2016 இல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பின்படி தொற்றா நோய்களால் பதிவாகும் மரணம் 83 சதவீதமாகும். இதில் 34 சதவீத மரணம் இதயம் மற்றும் இரத்த குழாயுடன் தொடர்புடைய பிரச்சினைகளினாலாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# தேங்காய்க்கு தட்டுப்பாடும் இல்லை; இறக்குமதித் திட்டமும் இல்லை

## வர்த்தக அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, செப்.30
நாட்டில் தேங்காய்க்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை. இதனால் தேங்காய் இறக்குமதி செய்வதற்கு எவ்வித திட்டமும் இல்லை என வர்த்தக அமைச்சின் செயலாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்துள்ளார். தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவித்து தேங்காய் விலையை அதிகரிக்க சில தரப்பினர் முயற்சிக்கின்றனர். தேங்காய்க்கு விதிக்கப்பட்டுள்ள நிர்ணய விலையை மாற்றுவதற்கான தேவை தற்போது இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். இதே வேளை, அதிக விலையில் தேங்காய் விற்பனையில் ஈடுபடுவோரைக் கண்டறிவதற்கான சுற்றிவளைப்புகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறான விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவித்துள்ளது. (வ-இ)

# பொலிஸ் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிக்க நடவடிக்கை



**கொழும்பு, செப்.30**
**பொலிஸ் துறையில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் ஆணைக்குழுவின் செயலாளர் நிஷாந்த வீரசிங்க தெரிவிக்கையில்;
இலங்கையின் பொலிஸ்துறையில் முதல் தடவையாக பெண் பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
எனினும் இன்னும் இந்தப் பதவிக்கு இதுவரை எவரும் நியமிக்கப்படவில்லை. பெரும்பாலான ஊடகங்கள், சிறுவர் மற்றும் பெண்கள் பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிபர் பிம்சானி ஜசிங்காராச்சி அந்த பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார் என்ற தகவலை வெளியிட்டுள்ளன. எனினும் இதில் உண்மையில்லை. இந்நிலையில் குறித்த பதவிக்குத் தகுதியானவரை நியமிக்கும் பணிகள் முன்னெடுக்கப்படும். பின்னர் அது பதில் பொலிஸ் அதிபருக்கு அறிவிக்கப்படும். இதேவேளை பொலிஸ் துறையில் பெண்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)

## ரயில் மோதி மூதாட்டி சாவு

கொழும்பு, செப்.30
ரயில் மோதியதில் 92 வயது மூதாட்டி உயிரிழந்துள்ளார். இவ் விபத்து பயாகல, எலகஹவத்த பகுதியில், பெலியத்தவிலிருந்து கொழும்பு நோக்கிய பயணித்த ரயில் மோதியதில் ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர் கல்லனமுல்ல, பயாகல பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. சடலம் நாகொட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பயாகல பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ந-இ)

## பாதாள உலக கைதிகள் பூஸாவுக்கு மாற்றம்

கொழும்பு, செப்.30
பாதாள உலக உறுப்பினர்கள் 33 பேர், பூஸா சிறைக்கு மாற்றப்படவுள்ளனர்.
சிறைச்சாலைக்குள் இருந்தவாறு தொலைபேசி மூலம் உரையாடல் மேற்கொண்டு, போதைப்பொருள் வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளமை தொடர்பில் கண்டறியப்பட்ட, பாதாளக் குழுக்களின் உறுப்பினர்கள் 33 பேரையே இவ்வாறு பூஸா சிறைக்கு மாற்றுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சிறைச்சாலை தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பூஸா சிறையில் தற்போது பாதாள குழுக்களைச் சேர்ந்த 46 குற்றவாளிகள் தனித்தனி சிறைக்கூடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் மேற்படி 33 கைதிகளையும் இங்கு தடுத்துவைப்பதற்காக, விசேட சிறைக்கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-இ)

## தேங்காய் விற்பனை: 56 வர்த்தகர்கள் நீதிமன்றில்

கொழும்பு, செப்.30
நிர்ணய விலைக்கு அதிகமாக தேங்காய் விற்பனை செய்த 56 வர்த்தகர்களுக்கு எதிராக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
நாட்டில் தேங்காய் விலை சடுதியாக அதிகரித்ததைத் தொடர்ந்து, தேங்காய்க்கான நிர்ணய விலை வர்த்தமானிமூலம் வெளியிடப்பட்டது.
இதனைத் தொடர்ந்து அதிக விலைக்கு தேங்காய் விற்பனை செய்யும் வர்த்தகர்களை அடையாளம் காணும் நோக்கில் நாடளாவிய ரீதியிலான சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நேற்றுமுன்தினம் முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

ஆணைக்குழுவில் தாக்கலான

## லலித் ஜயசிங்கவின் மனு; விசாரணைகள் நிறைவு

கொழும்பு, செப்.30
முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் லலித் ஜயசிங்கவினால் அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவில் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பான விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
நல்லாட்சி அரசாங்கத்தின்போது போலியான தகவல்களை அடிப்படையாகக்கொண்டே தான் வேலை நிறுத்தம் செய்யப்பட்டேன் என அவர் முறைப்பாடு செய்திருந்தார். இவ் விடயம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் சி.டீ விக்ரமரத்ன உள்ளிட்ட பலரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இதனடிப்படையில் இதுவரையில் நான்கு முறைபாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
இவ் விசாரணைகள் தொடர்பிலான அறிக்கை ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

## மத்தளவில் 'கார்கோ' கட்டடம்

கொழும்பு, செப்.30
மத்தள விமான நிலையத்தில் கார்கோ கட்டடம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ.வி.சானக தெரிவித்துள்ளார்.
ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யப்படும் பொருள்களை களஞ்சியப்படுத்துவதற்காகவே இக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது.
இதன் மூலம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதியுடன் தொடர்புடைய சகல நிறுவனங்களையும் ஒரே இடத்தில் கொண்டு வர எதிர்பார்ப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-இ)

## போதைப்பொருளுடன் மதுவரி அதிகாரி கைது

'மெண்டி' எனும் போதைப்பொருளுடன் இலங்கை மதுவரி திணைக்களத்தின் அதிகாரி உட்பட இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து சுமார் 1 கோடி ரூபா பெறுமதியான 653 கிராம் மெண்டி எனும் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.
கைதுசெய்யப்பட்ட அந்த அதிகாரியை உடன் அமுலுக்கு வரும் வகையில் பணிநீக்கம் செய்யுமாறு மதுவரி திணைக்கள ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். (ந-இ)

## வங்கிக் கணக்குகளில் கறுப்பு பணம்: அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, செப்.30
வங்கிக் கணக்குகளில் கறுப்புப் பணம் புழக்கத்தில் விடப்பட்டதற்காக வங்கி முகாமையாளர்கள் உள்ளிட்ட பொறுப்பான அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு அமைச்சகம் முடிவு செய்துள்ளது.
கடந்த இரண்டு வருடங்களில் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய 480 மில்லியன் ரூபா பணம் வங்கிக் கணக்குகளில் பரிமாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. இது தொடர்பில் தகவல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த கணக்குகளை நடத்திச் செல்வது தொடர்பில் அந்தந்த வங்கி கிளைகளின் முகாமையாளர்கள் பொறுப்புக்கூற வேண்டும் என பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.
போதைப்பொருள் கடத்தல்காரர்களின் வங்கி கணக்குகளில் பல கோடி ரூபா பணம் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதைத் தொடர்ந்து வங்கிகளின் பிரதானிகளை பாதுகாப்பு அமைச்சுக்கு அழைக்க பாதுகாப்பு செயலாளர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இவ்வாறான சம்பவங்களினால் வங்கிகளின் நற்பெயருக்கு பாதிப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என பாதுகாப்புச் செயலாளர் வங்கி அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.
அத்துடன் போதைப்பொருள் கடத்தல்காரர்களின் அதிக பணத்தை வைப்பில் வைக்க அனுமதி வழங்கிய தனியார் வங்கிகளின் பிரதானிகளும் தனியாக அழைக்கப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். (ந-இ)

## அரசுடைமையான மஞ்சள் விற்பனைக்கு!

### அரச நிறுவனங்கள் ஊடாக!!

கொழும்பு, செப்.30
இலங்கையில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.
அதனை சதொச உட்பட கூட்டுறவு சங்கங்கள் ஊடாக விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட மஞ்சள் தொகையின் நிறை 10 லட்சத்து 68 ஆயிரத்து 314 கிலோகிராம் ஆகும். எதிர்வரும் டிசம்பர் மாதம் வரை நாட்டின் மஞ்சள் தேவையை நிறைவேற்றுவதற்கு இந்த மஞ்சள் தொகையைப் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.
இலங்கைக்கு வருடாந்த பயன்பாட்டுக்காக 7500 மெட்ரிக் தொன் மஞ்சள் தேவைப்படுகின்றது. எனினும் இலங்கையில் 1200 மெட்ரிக் தொன் மஞ்சள் உற்பத்தியே மேற்கொள்ளப்படுகின்றது.
எனினும் எதிர்வரும் வருடம் முதல் மஞ்சள் தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தயாராகியுள்ளதென தெரிவிக்கப்படுகின்றது. (ந-இ)

# ரஷித்தின் பந்து துல்லியம் வாகை சூடியது ஹைதராபாத்

ஐ.பி.எல். தொடரில் டேவிட் வோர்னர் தலைமையிலான சன் ரைஸர்ஸ் ஐதராபாத், ஸ்ரேயஸ் அய்யர் தலைமையிலான டெல்லி கேப்பிட்டல்ஸ் அணிகளுக்கிடையே நேற்று நடந்த ஆட்டத்தில் சன் ரைஸர்ஸ் ஹைதராபாத் அணி 15 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஆட்டத்தில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற டெல்லி அணியானது களத்தடுப்பினை தேர்வு செய்ய ஹைதராபாத் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது.

ஆரம்ப வீரர்களாக களமிறங்கிய ஜோனி பெயர்ஸ்டோ மற்றும் டேவிட் வோர்னர் டெல்லியின் பந்து வீச்சுகளுக்கு சிறப்பாக முகங்கொடுத்து இலக்கு இழப்பின்றி ஓட்டங்களைக் குவிக்க ஆரம்பித்தனர்.

நான்கு புறங்களிலும் இவர்கள் அடித்தாட ஹைதராபாத் அணி 7 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் இலக்கு இழப்பின்றி 52 ஓட்டங்களை குவித்தது. டேவிட் வோர்னர், 10ஆவது பந்துப் பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் அமித் மிஷ்ராவின் பந்து வீச்சில் ரிஷாத் பந்திடம் பிடிகொடுத்து 45 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய மனீஷ் பாண்டேயும் வந்த வேகத்திலேயே மிஷ்ராவின் சுழலில் சிக்குண்டு மூன்று ஓட்டங்களுடன் வெளியேறினார். அப்போது ஐதராபாத் அணி 11.2 பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 92 ஓட்டங்களை எடுத்திருந்தது.




பின்னர் ஆடுகளம் புகுந்த ஹைதராபாத் அணியின் முன்னாள் தலைவர் கேன் வில்லியன்சன் பெயர்ஸ்டோவுடன் கைகோர்த்து, அவருக்கு பக்கபலமாக இருந்தார். ஒரு பக்கம் கேன் வில்லியன்சன் அடித்தாட, மறுபக்கம் 18 ஆவது பந்துப் பரிமாற்றத்தின் முதலாவது பந்து வீச்சில் பெயர்ஸ்டோ 44 பந்துகளில் ஒரு சிக்ஸர், இரு பவுண்டரிகள் அடங்கலாக அரைசதம் கடந்தார்.

அதே பந்துப் பரிமாற்றத்தில் ஐந்தாவது பந்தை உயர்த்தி அடித்த பெயர்ஸ்டோ அன்ரிச் நார்ட்ஜேவிடம் பிடிகொடுத்து 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.




4 ஆவது இலக்குக்காக அப்துல் சமட் களமிறங்க கேன் வில்லியம்சன் 20 ஆவது பந்துப்பரிமாற்றத்தின் மூன்றாவது பந்து வீச்சில் மொத்தமாக 26 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகள் அடங்கலாக 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியாக ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களின் முடிவில் 4 இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களை குவித்தது. ஆடுளத்தில் அப்துல் சமட் 12 ஓட்டங்களுடனும், அபிஷேக் சர்மா ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்து வீச்சில் டெல்லி அணி சார்பில் ரபடா மற்றும் மிஷ்ரா தலா இரு இலக்குகளைக் கைப்பற்றினர். 163 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் தொடக்க வீரர்களாக பிரித்வி ஷா மற்றும் ஷிகர் தவான் ஜோடி களமிறங்கினர்.

5 பந்துகளை சந்தித்த பிரித்வி 2 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து புவனேஷ்குமார் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்துவந்த டெல்லி அணித் தலைவர் ஸ்ரேஷ் ஐயர் 21 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்து ரஷித்கான் பந்துவீச்சில் ஆட்டமிழநதார்.

அடுத்து களமிறங்கிய ரிஷப் பண்ட், ஷிகர் தவானுடன் ஜோடி சேர்ந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். ஆனால், 31 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்திருந்த தவானை ரஷித்கான் வெளியேற்றினார்.

அடுத்துவந்த ஹெட்மையர் 12 பந்தில் 21 ஓட்டங்கள் எடுத்து புவனேஷ் குமார் பந்து வீச்சில் பிடிகொடுத்து வெளியேறினார். 2 சிக்சர்கள் உள்பட 27 பந்தில் 28 ஓட்டங்கள் குவித்திருந்த ரிஷப் பண்டையும் ரஷித் கான் வெளியேற்றினார்.

பின்னர் வந்த வீரர்கள் யாரும் நிலைத்து நின்று ஆடாத நிலையில் டெல்லி கேப்பிட்டல்ஸ் 20 பந்துப் பரிமாற்றங்கள் முடிவில் 7 இலக்குகளை இழந்து 147 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

சிறப்பாக பந்துவீசிய ஹைதராபாத் அணியின் ரஷித் கான் 4 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 14 ஓட்டங்கள் மட்டுமே விட்டு க்கொடுத்து 3 இலக்குகளை வீழ்த்தினார். புவனேஷ்குமார் 2 இலக்குகளை வீழ்த்தி வெற்றிக்கு வழிவகுத்தார். (எ)

காணி விற்பனைக்கு
வத்தளை, மாபோல, வெலிக்கடமுல்ல வீதியில் 43 பேர்ச் காணி அவசர பணத்தேவைக்காக உடன் விற்பனைக் உள்ளது. முகவர்கள் தேவையில்லை நேரடியாக தொடர்புகொள்ளவும்.
071 343 3263, 071 316 7572

கார்கள் வாடகைக்கு உண்டு
கார்கள் நாள் வாடகைக்கு சாரதி அல்லாமல் அல்லது சாரதி உடன் வாடகைக்கு விடப்படும்.
077 898 9691
(யாழ்ப்பாணம்)

பணிப்பெண் தேவை
கொழும்பு தெகிவளையில் சிறிய குடும்பமொன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து சமையலும் வீட்டு வேலைகளும் செய்யக்கூடிய 40-55 வயதுக்குட்பட்ட பணிப் பெண்ணொருவர் தேவை.
தொடர்பு: 071 450 9450

பெயர் பதிவுசெய்தல் தொடர்பானது
புதுமுறிப்பு, கிளிநொச்சியில் வதியும் பாபு தெய்வானை ஆகிய நாங்கள் எமது பிள்ளைக்கு பிறப்பத்தாட்சிப் பத்திரத்தில் பெயரினை பதிவுசெய்யத் தவறியதால் கலையரசன் என பெயரை பிறப்பத்தாட்சிப்பத்திரத்தில் பதிவுசெய்து இனிவரும் சகல ஆவணங்களிலும் கலையரசன் என்றே பயன்படுத்துவோம் என உறுதியளிக்கின்றோம்

வேலையாட்கள் தேவை
முறுகண்டியில் இயங்கும் உணவு உற்பத்தி நிறுவனத்திற்கு
* முகாமையாளர்
* உணவு தயாரிப்பவர்
* உணவு பரிமாறுபவர்
* சுத்திகரிப்பாளர்
உடன் தேவை.
தொடர்பு: 077 386 6250



மாணிக்கவாசகர் மடாலய
அன்னதான சபை
சிவன்கோயில் (ஈழத்துச் சிதம்பரம்)
காரைநகர்

வருடாந்த பொதுக்கூட்டமும், கணக்கறிக்கை சமர்ப்பித்தலும்

இடம் : மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை மண்டபம்
காலம் : 2020.10.11 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
தலைவர் : ESP நாகரத்தினம்
விடயம் : 2019-2020ம் ஆண்டுக்கான கணக்கறிக்கை சமர்ப்பித்தலும், மடாலய தற்போதைய நிலைமைகள் குறித்து கலந்துரையாடலும் இடம்பெறும்.

தங்களைக்கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தலைவர்
மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபை
ஈழத்துச் சிதம்பரம் (திண்ணபுரம் சிவன் கோயில்)
காரைநகர்.

## மோ.சைக்கிள்....

அதில் படுகாயமடைந்த சைக்கிளில் சென்றவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், அவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.

அருட்தந்தை விக்டர் ஜெயசிங்கம் (வயது65) என்பவரே உயிரிழந்தார். இந்த விபத்து கடந்த 2ஆம் திகதி யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடந்துள்ளது.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைதில் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## 84 மில்லிமீற்றர்...

மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வீசிய கடும் காற்றால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சரவணபவானந்த வித்தியாலயத்தில் மரம் முறிந்து விழுந்து வகுப்பறை சேதமடைந்துள்ளது.

இந்த மரம் யாழ்ப்பாண மாவட்ட செயலக இடர் முகாமைத்துவ பிரிவின் உதவியுடன் அகற்றப்பட்டது. யாழ்ப்பாண மாவட்டத்தில் வேறு இடர்கள் பதிவாகவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-111)

## 2 கிலோ...

னையில் 2 கிலோ 100 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பளைப்பொலிஸார்தெரிவித்தனர்.


நேற்று மழை பெய்து கொண்டிருந்த சமயம் ஆனையிறவு சோதனைச் சாவடி ஊடாகப் பயணித்த பட்டா ரக வாகனம் ஒன்றைச் சோதனையிட்டபோதே கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனச் சாரதி உட்பட, வாகனத்தில் பயணித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆழியவளையில் இருந்து குருநாகலுக்கு இந்தக் கஞ்சா கடத்தப்படவிருந்தமை விசாரணையில் தெரியவந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சான்றுப் பொருள்களுடன் சந்தேகநபர்கள் இன்று கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பளை பொலிஸார் தெரிவித்தனர். (எ-6, 113)

# மரண அறிவித்தல்

பிறப்பு
03 . 03 . 1958



இறப்பு
28 . 09 . 2020

## வையித்திலிங்கம் நவரட்ணம் (நவரி)


( உரிமையாளர், ரட்ணம் பந்தல்)

மல்லாகத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வையித்திலிங்கம் நவரட்ணம் கடந்த (28.09.2020) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற வையித்திலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும். அராலி வடக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு- தவமணி தம்பதியரின் மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், ராதிகா, ரேணுகா (ஆசிரியை-கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கலைமகள் முன்பள்ளி ஆரம்ப பாடசாலை), பிரசாந், காலஞ்சென்ற கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தேவகுமார் (இலத்திரனியலாளர்), தேவகரன் ஆகியோரின் அன்பு மாமனும், டச்சயன், லேகா, அக்ஷயா, அனன்யா ஆகியோரின் பேரனும், விஜயரட்ணம் (ரட்ணம் பந்தல்-மானிப்பாய்), ராகினி, குணரட்ணம், ஜெயரட்ணம், ரஞ்சினி தேவி, லலிதாம்பிகை ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பூமணி, பூபால சிங்கம், ரஞ்சினி, புஸ்பலதா, விஜயகுமார், யாதவராசா, தெய்வேந்திரம், யோகேந்திரன், தங்கமலர், கிருபாமணி, இராசமணி, விக்கினேஸ்வரன், சிவனேஸ்வரன், காலஞ்சென்ற மகேந்திரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீதிமன்ற வீதி, மல்லாகம்.

தகவல்: குடும்பத்தினர்
077 045 0751-மகன்
076 333 5860-மருமகன்

# மரண அறிவித்தல்



## சுப்பையா செல்வரத்தினம்

ஓய்வுபெற்ற களஞ்சியப்பொறுப்பாளர்
(பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், காரைநகர்)

காரைநகர் இடைப்பிட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா செல்வரத்தினம் நேற்று (29.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகம்மாவின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புக் கணவரும், லோகேஸ்வரி (கனடா) அருள்செல்வம் (ஆசிரியர்-யா/யாழ்ரன் கல்லூரி) யோகரத்தினம் (பிரான்ஸ்) செந்தில்நாதன் (லண்டன்) சந்திராதேவி, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் (தொழில்நுட்பவியலாளர் புகையிரத நிலையம்- மருதானை) ஜெகதாம்பிகை (ஆசிரியர்-யா/காரைநகர் இந்துக்கல்லூரி) பகீரதி (பிரான்ஸ்) கார்திகாஜினி (லண்டன்) விமலகுமார் (த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ், த.குமாரசாமி அன் சன்ஸ்) ஆகியோரின் மாமனாரும், பாக்கியராசா, காலஞ்சென்ற சிறீகரலட்சுமி, தருமராசா (M.G.R) காலஞ்சென்ற சாரதா, லலிதா, கோகனதை, நிர்மலாதேவி, அரிகரராசா, நவமணி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும், சிவஞானம், செல்வராசா, பரஞ்சோதி, தவமணிதேவி, செல்வரத்தினம், கனகாம்பிகை, திலகவதி, மங்கலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், ஆறுமுகம் காலஞ்சென்ற சோமசுந்தரம், இராசையா, காலஞ்சென்ற சோமசுந்தரம் ஆகியோரின் சகலனும், அஜந்தன், செந்தூரன், சானுஜா, தேனுஜா, அபிஷா, அஸ்வினி, ஜெலக்சன், ஜெய்டன், சாருஜன், கஜீபன், நிருஜன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.10.2020) வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இடைப்பிட்டி, காரைநகர்.
077 844 8333
077 601 6258

தகவல்:
குடும்பத்தினர்

அடக்கியாள....

கடந்த 26ஆம் திகதியும், 28ஆம் திகதியும் இங்கு நடைபெற்ற அரசுக்கு எதிரான அறவழிப் போராட்டங்களின் வெற்றிச் செய்திகள் இதற்கு உதாரணங்களாக உள்ளன.
இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.
இது தொடர்பில் நேற்றிரவு 'உதயன்' பத்திரிகையிடம் அவர் தெரிவித்ததாவது:
தமிழர்களின் நினைவேந்தல் உரிமையை வலியுறுத்தியும், ராஜபக்ச அரசின் திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கு எதிராகவும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் அழைப்புக்கிணங்க கடந்த 26ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டமும், 28ஆம் திகதி வடக்கு, கிழக்கு தழுவிய ரீதியில் பூரண ஹர்த்தால் போராட்டமும் நடைபெற்றன. அதற்கு தமிழ்பேசும் உறவுகள் முழுமையான பங்களிப்பை வழங்கியிருந்தார்கள். போராட்டம் நாம் நினைத்த மாதிரி வடக்கு, கிழக்கில் வெற்றியடைந்துள்ளது. அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய தமிழ்பேசும் உறவுகளுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அரசு எம்மை அடக்கியாள இனியும் நினைக்கவே கூடாது என்பதை தமிழ்பேசும் உறவுகள் ஓரணியில் நின்று புரிய வைத்துள்ளனர்.
தமிழ்பேசும் உறவுகளின் இந்த உணர்வுபூர்வ எழுச்சியைக் கண்டாவது அரசு தனது போக்கில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். தமிழ் பேசும் மக்களுக்கு சகல உரிமைகளையும், நிரந்தர அரசியல் தீர்வையும் வழங்க இந்த அரசு முன்வர வேண்டும்என்றார். (எ-22)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
27 . 10 . 2002



இறப்பு
12 . 10 . 2019

## தவராசா சரண்குமார்

(கொக்குவில் இந்துக் கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவன்-2021)

எம் அன்புத் தம்பி சரண் ஆண்டு ஒன்று சென்றாலும்
நீ எம்முடன் வாழ்ந்த காலங்களை
மீண்டும் மீட்டுத் தந்து கொண்டிருக்கின்றாய்.
உன் அன்பான பேச்சும் உன் குறும்புத்தனமான செயலும்
என்றும் உன் நினைவுகளை தந்து கொண்டிருக்கின்றன.
காலத்தின் செயல்களாய் கண்சிமிட்டும் நொடிக்குள்
நீ எம்மை விட்டுச் சென்றுவிட்டாய்
காலங்கள் கடந்து சென்றாலும் கடைசிவரை
உன் நினைவுகள் என்றும் எம் மனதில் தொடரும்.....

குடும்பத்தினர்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அழைப்பும்



## அமரர் திருமதி அருளப்பன் மேரி அஞ்சலீனா

அன்னை மடியில்
24.03.1946

ஆண்டவன் அடியில்
01.09.2020

"இதோ உன்னை பெயரிட்டு நாமே அழைத்தோம் ஆகவே நீ எனக்கே சொந்தம்" (எசாயா 43.1)

அம்மா... அம்மா நீங்கள் எம்மை பிரிந்து
மாதம் ஒன்று ஆகியதோ
எம் கண்களில் வழியும் கண்ணீர்த்துளிகள்
காலங்கள் நீண்டும் காய்ந்திடாதே.

அம்மாவின் இறுதிச்சடங்கில் பங்குகொண்டு செபித்து அனுதாபத்தை தெரிவித்த யாழ் மறை மாவட்ட ஆயர், குரு முதல்வர், அருட்பணியாளர்கள் அருட் சகோதரிகள், துறவிகள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள்.
01.10.2020 முற்பகல் 11.00 மணிக்கு சுன்னாகம் தூய அந்தோனியார் ஆலயத்தில் அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியிலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

N.S.B வங்கி முன் வீதி,
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.

அருள்பணி றொபின்சன் ஜோசப்
குடும்பத்தினர்
077 166 0448, 077 251 6560

## 20 இல் ......

20ஆவது திருத்தத்துக்கு பல தரப்புகளில் இருந்து எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையிலும், திருத்த வரைவுக்கு எதிராக நீதிமன்றங்களில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையிலும் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

அரசமைப்பு பேரவைக்குப் பதிலாக 20 ஆவது திருத்தச்சட்டவரைவின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5 இல் இருந்து 9 ஆக அதிகரிப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது என்று தெரியவருகின்றது.

சபை அமர்வு ஆரம்பமாகி ஓராண்டுக்கு பிறகு நாடாளுமன்றத்தை ஜனாதிபதியால் கலைக்கமுடியும் என்ற கால எல்லையை இரண்டரை வருடங்களாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 3 இல் இருந்து 5ஆக அதிகரித்தல், ஜனாதிபதி மற்றும் பிரதமர் அலுவலகங்களின் கணக்காய்வு நடவடிக்கையை கணக்காய்வாளர் நாயகத்தின்கீழ் கொண்டுவருவதல் போன்ற திருத்தங்களைச் செய்வதற்கும் அரசு இணக்கம் வெளியிட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போதே இந்தத் திருத்தங்கள் செய்யப்படவுள்ளன.

அதேவேளை, '20' ஆவது திருத்தச்சட்டவரைவு நாடாளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது திருத்தப்படும் என்ற விடயத்தை சட்டமா அதிபர் நேற்று உயர் நீதிமன்றத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளார். (எ-44)

## 20 க்கு ......

பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இந்த மனுக்கள் மீதான விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை முடிவுக்கு கொண்டு வரப்படும் என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய நேற்றுத் தெரிவித்தார். இன்றும் மனுக்கள் மீதான விசாரணை தொடரும்.

20 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் பரிசீலிக்கின்றது. இந்த விடயம் தொடர்பில் 39 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், 7 இடையீட்டு தரப்புகளும் முன்வந்துள்ளன.

குழுநிலை சந்தர்ப்பத்தில் சட்டவரைவு திருத்தம் மேற்கொள்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது என்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணிகளின் வாய்மூல சமர்ப்பணங்கள் ஆரம்பமாவதற்கு முன்னதாக சட்ட மா அதிபர் மன்றில் நேற்று அறிவித்தார். அந்தத் திருத்தங்கள் அடங்கிய ஆவணத்தையும் சட்டமா அதிபர் தப்புல டி லிவேரா உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

ஆயினும், நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த ஆவணத்துக்கு எதிராகவே தாம் உயர் நீதிமன்றத்துக்கு வந்துள்ளோம் என்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

நீதிமன்றம் பரிசீலிக்க வேண்டியது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணத்தையே தவிர, குழுநிலை சந்தர்ப்பத்தில் திருத்தப்படவுள்ளதாகக் கூறப்படும் ஆவணத்தை அல்ல என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதிக்கு பூரணமான விடுபாட்டு உரிமை கிடைப்பதன் மூலம் சட்டத்துக்கும் அப்பாற்பட்ட பதவியொன்று உருவாகின்றது என்று மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர்.

மக்கள் உயர் நீதிமன்றத்தை நாடுவதற்கு உள்ள அடிப்படை உரிமைக்கு இதன் மூலம் இடையூறு ஏற்படுவதால், அது அடிப்படை உரிமை மீறலாகும் எனவும் அவர்கள் வாதங்களை முன்வைத்தனர்.

பூரணமான விடுபட்டு உரிமையை மீள வழங்குவது தொடர்பிலான சரத்து மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் மாத்திரமல்லாது மக்கள் கருத்துக் கணிப்பின் ஊடாகவும் நிறைவேற்றப்பட வேண்டும் என மனுதாரர்களின் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

இரட்டை பிரஜாவுரிமை உள்ள ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவது தொடர்பிலும் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டினர்.

வெளிநாட்டு அரசுகளுடன் சத்தியப்பிரமாணம் செய்துள்ளவர்களது சார்புத்தன்மை தொடர்பிலான முரண்பாடு மக்களின் இறைமைக்கு அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று அவர்கள் தெரிவித்தனர். அந்த சரத்தும் மக்கள் கருத்து கணிப்பின் மூலம் நிறைவேற்றப்பட வேண்டும் என மனுதாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் வாதங்களை முன்வைத்தனர்.

ஜனாதிபதியின் பொறுப்புகள் தொடர்பான முழுமையான சரத்தில் நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என்ற பகுதி மாத்திரம் 20 ஆவது திருத்த சட்டவரைவின் வேறொரு இடத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ தெரிவித்தார். இந்தச் சரத்து குழுநிலை சந்தர்ப்பத்தில் நீக்கப்படுமா என்ற சந்தேகம் எழுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

19 ஆவது அசமைப்பு திருத்தத்தை நீக்கி 20 ஆவது திருத்தம் கொண்டுவரப்பட்டது என்று கருத்துக்கள் முன்வைக்கப்பட்டாலும் அத்தகைய ஒன்று நிகழவில்லை என சட்டத்தரணிக்ள உயர் நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டினர்.

19 ஆவது திருத்தம் முழுமையான அரசமைப்பின் ஒரு பகுதி என்பதால், அது அனைத்து சரத்துகளுடனும் தொடர்புபட்டுள்ளது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

20 ஆவது திருத்தமும் அரசமைப்பின் ஒரு பகுதியன்றி முழுமையான அரசமைப்பின் அடிப்படைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது என்றும் சட்டத்தரணிகள் நீதிமன்றில் சுட்டிக்காட்டினர்.

இந்த மனுக்கள் மீதான விசாரணை இன்றும் உயர் நீதிமன்றில் தொடரவுள்ளது.

20ஆவது அரசமைப்புத் திருத்த வரைபு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியால் சமர்ப்பிக்கப்பட்டது. அது சமர்ப்பிக்கப்பட்டு ஒரு வார காலத்துக்குள் எதிர்ப்புத் தெரிவித்து யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் 21 நாள்களுக்கு திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் நாடாளுமன்றத்துக்குள் முன்னெடுக்க முடியாது. (எ-இ)

## ரயிலுடன் ......

ரயிலுடன் மோதியவரின் உடல் சிதைவடைந்துள்ளதால் அடையாளம் காண முடியவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த கடுகதி ரயிலுடன் மோதியே இந்த விபத்து நடந்துள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-6)

## ஆணின் சடலம் ......

அந்தப் பகுதிக்குக் குழை வெட்டச் சென்றவர்கள், துர்நாற்றம் வீசியத்தை அடுத்து தேடுதல் நடத்தியபோதே உருக்குலைந்த நிலையில் இருந்த சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

உருக்குலைந்த சடலத்தின் பாகங்களுடன், சரம், சேட் என்பன காணப்பட்டுள்ளன. இது தொடர்பாகக் கிராம அலுவலருக்கும், பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணை மேற்கொண்டனர். பொலிஸார் நடத்திய தேடுதலில் காட்டுப் பகுதியில் இருந்து மேலும் சில எலும்புகளும் மண்டையோடும் மீட்கப்பட்டன.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் சடலம் மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்தவரின் உடல் என்று அடையாளம் காணப்பட்டது.

சுமார் 50 வயதுடைய இவர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்றும், சில காலமாக இவர் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் கூறப்படுகின்றது.

இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். கிளிநொச்சி மாவட்ட நீதிவான் இன்று சடலத்தைப் பார்வையிடுவார் என்றும், அதன்பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் பளைப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-6)

## விபத்தில் .....

மல்லாகத்தைச் சேர்ந்த வைத்திலிங்கம் நவரட்ணம் (வயது63) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து கடந்த 27ஆம் திகதி நடந்துள்ளது. இவர் சுன்னாகத்தில் வீதியைக் கடக்க முயன்றபோது, யாழ்ப்பாணத்தில் இருந்து காங்கேசன்துறை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானர்.

விபத்தில் சிக்கிய இவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் இரவு உயிரிழந்தார்.

இறப்பு விசாரணைகள் நேற்று மேற்கொள்ளப்பட்டன. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்புவிசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். (எ-26)

## கடந்த....

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

பத்திரிகைகளின் ஆசிரியர்கள் மற்றும் தொலைக்காட்சி, வானொலி நிலையங்களின் செய்தி பணிப்பாளர்களுடன் அலரி மாளிகையில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

திலீபனின் நினைவேந்தலுக்கு அனுமதிக்கக் கோரி வடக்கில் முழு அடைப்புப் போராட்டம் நடத்தப்பட்டது. இந்த நிலையை அரசு எவ்வாறு எதிர்கொள்கிறது? கடந்த காலம் போன்றதொரு நிலை மீண்டும் ஏற்படுமா? என்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப்பதிலளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவ்வாறானதொரு நிலை மீண்டும் ஏற்படாது. நாடு பாதுகாப்பாக உள்ளது. பாதுகாப்பு தொடர்பில் நாம் மிகுந்த அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றோம். மீண்டும் வடக்கில் அவ்வாறான்தொரு நிலை ஏற்படின் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட பதிலே பதிலாக அமையும் என்று மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்சவிடம் ஊடவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளும், அவர் அளித்த பதில்களும்

ஊடகவியலாளர்: 20ஆவது திருத்தம் தொடர்பில் பிரதமரின் கருத்து என்ன?

பிரதமர்: அரசு எனும்போது, அரசின் கருத்தே எனது கருத்தாகும். 20ஆவது திருத்தத்துக்கு எவ்வித சிக்கலும் ஏற்படாது.

ஊடகவியலாளர்: 20ஆவது திருத்தத்தின் பின்னர் பிரதமர் பெயரளவிலானவராக மாறுவாரா?

பிரதமர்: இல்லை. அது பிரதமரின் கைகளிலேயே உள்ளது.

ஊடகவியலாளர்: இந்தியப் பிரதமருடனான கலந்துரையாடலின்போது 13ஆவது திருத்தம் கட்டாயப்படுத்தப்பட்டது என ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டமை குறித்து இலங்கைப் பிரதமரின் கருத்து என்ன?

பிரதமர்: தற்போதுள்ள அரசமைப்பே செயற்படுத்தப்படும். மாகாண சபைத் தேர்தலை யார் தாமதப்படுத்தியது? தேர்தலை நடத்தாதிருந்தவர்கள் யார் என்று நீங்கள் அறிவீர்கள். நாம் உரிய முறையில் தேர்தலை நடத்தியதையே செய்தோம்.

ஊடகவியலாளர்: புதிய அரசமைப்பொன்றைக் கொண்டு வரவுள்ளீர்களா?

அமைச்சர் உதய கம்மன்பில: புதிய அரசமைப்பு வரைபொன்றைத் தயாரிப்பதற்கு அமைச்சரவையில் ஜனாதிபதி சட்டத்தரணி றொமேஷ் டி சில்வா தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் வாக்கெடுப்பொன்றுக்குச் செல்ல வேண்டும்.

பிரதமர்: அரசமைப்பு முழுவதும் மாற்றம் செய்யப்படின் வாக்கெடுப்புக்குச் செல்வது அவசியமாகும். ஆனால், எமக்கு அந்த மக்கள் ஆணை தெளிவாக கிடைக்கப் பெற்றுள்ளது.

அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல: அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என்றே எமக்கு மக்கள் ஆணை கிடைத்தது. அது குறுகிய கால தீர்வு. புதிய அரசமைப்பொன்றைக் கொண்டு வருவது நீண்ட கால தீர்வாக அமையும்.

ஊடகவியலாளர்: 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற இடமளிக்கப் போவதில்லை என்று ஒரு தரப்பு கூறும்போது, 20ஐ நிறைவேற்றுவோம் என்று அரசு கூறுகின்றதே?

பிரதமர்: எங்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை மக்கள் வழங்கியுள்ளனர். கட்சிகளுக்கும், தனி நபர்களுக்கும் வேறுபட்ட கருத்துக்கள் காணப்படக்கூடும். எமக்கு நிலையான மூன்றில் இரண்டு பெரும்பான்மை காணப்படுகின்றது. அதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஊடகவியலாளர்: சட்டவிரோத இந்திய மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு உள்ளதா?


பிரதமர்: சட்டவிரோத மீனவர் பிரச்சினையை இந்தியப் பிரதமரிடம் முன்வைத்துள்ளோம். நாடு என்ற ரீதியில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை நாம் கடற்படையினருக்கு அறிவித்துள்ளோம்.

ஊடகவியலாளர்: 20இற்கு ஆதரவாகக் கைகளை உயர்த்துவதற்காக அரசில் இணைத்துக்கொள்ளும் எதிரணி உறுப்பினர்களுக்குப் பதவிகளை வழங்குவீர்களா?

பிரதமர்: எமக்கு 150 உறுப்பினர்களுடனான பெரும்பான்மை காணப்படுகின்றது. பதவிகளுக்காக வரும் உறுப்பினர்கள் தற்போது இல்லை. இதனையும் சொல்ல வேண்டும். 19க்கு நான் வாக்களிக்கவில்லை. (எ-22)

# ஆர்மேனியா – அஸர்பைஜான் போரில் 39 பேர் உயிரிழப்பு

**ஆசிய நாடான ஆர்மேனியா மற்றும் அஸர்பைஜான் படைகளுக்கு இடையில் இரண்டாவது நாளாகவும் நேற்று மோதல் இடம்பெற்றுள்ளது.**





இதில் 39 பேர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சர்ச்சைக்குரிய நகோர்னோ காரபெக் பிராந்தியம் தொடர்பிலேயே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. அஸர்பைஜான் படைகள், வான் மற்றும் ஆட்லறி தாக்குதல்களை ஆரம்பித்தன என ஆர்மேனிய பிரதமர் நிக்கோல் பஷின்யன் தெரிவித்துள்ளார். இந்தநிலையில், இரண்டு ஹெலிகொப்டர்களையும் 3 ட்ரோன்களையும் ஆர்மேனியப் படைகள் சுட்டு வீழ்த்தியுள்ளன.

அத்துடன், தாக்குதல் நடத்த வந்த அஸர்பைஜான் விமானங்கள் விரட்டப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னரங்க நிலைகள் அனைத்திலுமிருந்து பெரும் ஷெல் தாக்குதல்களை இரண்டு நாடுகளும் பரஸ்பரம் மேற்கொண்டுள்ளன எனத் தெரியவருகிறது. (வ)





### கொரியப் போரில் உயிரிழந்த

## 117 சீன வீரர்களின் அஸ்தி சீனாவை வந்தடைந்தது

பீஜிங், செப்.30

1950 ஆம் ஆண்டு, தென்கொரியாவுக்கு எதிரான போரில் உயிரிழந்த 117 சீன வீரர்களின் அஸ்திகள் சிறப்பு விமானம் மூலம் தென்கொரியாவிலிருந்து சீனாவுக்குக் கொண்டுவரப்பட்டதன.

சீனாவுடனான உறவை மேம்படுத்தும் வகையில், கொரியப் போரில் உயிரிழந்த 599 சீன வீரர்களின் அஸ்திகளைக் கடந்த 7 ஆண்டுகளாக சீனாவுக்கு அனுப்பி வருகின்றது.

அந்தவகையில் தற்போது, 117 வீரர்களின் அஸ்திகள் அனுப்பப்பட்டுள்ளன. உயிரிழந்தவர்களுக்கு, ஷென்யாங் நகரிலுள்ள பூங்காவில் தேசிய கீதம் முழங்க இராணுவ மரியாதையுடன் நேற்று முன்தினம் இறுதி அஞ்சலி செலுத்தப்பட்டது. (வ-இ)

## இந்தியாவில் பணிகளை நிறுத்துகிறோம்!

*அம்னெஸ்டி இன்டநஷனல் அறிவிப்பு*

புதுடில்லி, செப்.30

சர்வதேச மனித உரிமை அமைப்பான அம்னெஸ்டி இன்டநஷனல் இந்தியாவில் தனது பணிகளை நிறுத்திக்கொள்வதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து அம்னெஸ்டியின் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் அவினாஷ் குமார் தெரிவித்துள்ளதாவது,

கடந்த இரு ஆண்டுகளாக அம்னெஸ்டி அமைப்பின் மீதான தொடர்ச்சியான அடக்குமுறை, அவ்வமைப்பின் வங்கிக் கணக்குகள் இந்திய அரசால் முடக்கப்படுவது தற்செயலானது அல்ல. அமுலாக்கத்துறை உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் தொடர்ந்து எங்களுக்குத் தொல்லை கொடுத்தவண்ணம் இருந்தன. காரணம் அரசு செயல்பாடுகளில் வெளிப்படைத்தன்மையை வலியுறுத்தியதுதான். சமீபத்தில் டில்லி கலவரம் மற்றும் ஜம்மு காஷ்மீரில் இடம்பெற்ற கடுமையான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொலிஸ் மற்றும் இந்திய அரசாங்கத்துக்கு எதிராக எதிர்ப்புக் குரல்களைப் பதிவுசெய்ய முடியாத அளவு அநீதி நிலவுகிறது எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

## குற்றச்சாட்டையடுத்து பதவி விலகினார் அமைச்சர்




கான்பரா, செப்.30

ஆஸ்திரேலியாவில் விக்டோரியா மாநில சுகாதார அமைச்சர் ஜென்னி மிகா கோஸ் பதவி விலகியு ள்ளார். கொரோனாத் தனிமைப்படுத்தும் திட்டம் விடுதிகளில் சரிவர மேற்கொள்ளப்படாமைக்கு அவர் பொறுப்பேற்க வேண்டும் என்று மாநில முதல்வர் டேனியல் ஆண்ட்ரூஸ் கூறினார்.

அதற்கு மறுநாள் அவர் பதவி விலகியுள்ளார். அந்தத் திட்டம் உரிய கவனத்துடன் செயல்படுத்தப்படவில்லை என்றும் விடுதிகளில் துப்புரவுப் பணிகளும், கிருமிப் பரவல் தொடர்பான கட்டுப்பாடுகளும் சரியாகப் பின்பற்றப்படவில்லை என்றும் அவற்றில் பணியாற்றிய பகுதி நேர ஊழியர்கள் சிலருக்குக் கிருமித்தொற்று அறிகுறிகள் இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டது. அதையடுத்து மாநில மக்களின் நிலைமைக்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்ட அமைச்சர் மிகா கோஸ், பதவி விலகியுள்ளார். (வ-இ)



# 64 நாடுகளின் தலைவர்கள் இயற்கைக்காக ஒன்றிணைவு

64 நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் ஒன்றிணைந்து பூமியை 'அவசரநிலையிலிருந்து' பாதுகாப்பதற்கான இயற்கைக்கான ஒப்பந்தம் ஒன்றில் கைசாத்திட்டுள்ளனர்.

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன், ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மேர்க்கெல் மற்றும் பிரித்தானியாவின் பிரதமர் போரிஸ் ஜோன்சன் உள்ளிட்ட உலகத் தலைவர்கள், இவ் ஒப்பந்தத்தில் கைசாத்திட்டுள்ளனர். காடழிப்பை குறைப்பதற்கான முயற்சிகளை மீண்டும் இரட்டிப்பாக்குதல், ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்நீ டிக்க முடியாத மீன்பிடி நடைமுறைகளை அகற்றுதல், 2050 ஆம் ஆண்டுக்குள் பிளாஸ்டிக்குகள் கடலில் கொட்டப்படுவதை தடுப்பதற்கான உறுதிமொழியை மீண்டும் இரட்டிப்பாக்குதல், உள்ளிட்ட இயற்கைக்கான 10 அம்ச உறுதிமொழிகள் இவ் ஒப்பந்தத்தில் உள்ளடங்குகின்றன. 116 உலகத் தலைவர்கள் பங்குபற்றுதலுடன் ஐ.நா.வின் பல்லுயிர் மெய்நிகர் உச்சி மாநாடு புதன்கிழமை நியூயோர்க்கில் நடைபெற உள்ளது. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கான சர்வதேச நடவடிக்கையின் ஒரு வாரத்தை குறிக்கும் வகையில் இவ் உச்சிமாநாடு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# இரண்டாவது சுற்றுக்குள் டொமினிக் திம், செரீனா

பரிஸ், செப்.30

**பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் ஆஸ்திரிய வீரர் டொமினிக் திம், அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் ஆகியோர் வெற்றி பெற்றனர்.**





கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் போட்டி பரிஸ் நகரில் நடந்து வருகிறது. இதில் 2 ஆவது நாளான நேற்றுமுன்தினம் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் அமெரிக்க பகிரங்க சம்பியனும், உலக தரவரிசையில் 3 ஆவது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரிய வீரர் டொமினிக் திம் 6:4, 6:3, 6:3 என்ற நேர் செற்றில் 7 ஆம் நிலை வீரரான மரின் சிலிச்சை (குரோஷியா) வீழ்த்தி 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முதல் சுற்றில், உலக தரவரிசையில் 11 ஆவது இடத்தில் இருக்கும் கிவிடோவா (செக்குடியரசு) 6:3, 7:5 என்ற நேர் செற்றில் பிரான்ஸ் வீராங்கனை ஓசியன் டோடினை தோற்கடித்து 2 ஆவது சுற்றுக்குள் நுழைந்தார்.

மற்றொரு ஆட்டத்தில் 8 ஆம் நிலை வீராங்கனை யான கிகி பெர்டென்ஸ் (நெதர்லாந்து) 2:6, 6:2, 6:0 என்ற செற் கணக்கில் உக்ரைன் வீராங்கனை காதரினா ஜவாத்ஸ்காவை வீழ்த்தினார். மற்றொரு ஆட்டத்தில் முன்னாள் முதல்நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் (அமெரிக்கா) 7:6 (7:2), 6:0 என்ற நேர் செற்றில் சக நாட்டு வீராங்கனை கிறிஸ்டியை விரட்டியடித்து 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். (ற)



## கிளிநொச்சியில் கடினப்பந்து துடுப்பாட்டக் கலந்துரையாடல்

கொடிகாமம், செப்.30

கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் பெண்களுக்கான கடினப்பந்து துடுப்பாட்டப் போட்டிக்கான கலந்துரையாடல் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடல் அதிபர் கி.விக்னராஜா தலைமையில் இடம்பெற்றது.

இதில், இலங்கைத் துடுப்பாட்டச் சங்க பெண்களின் ஒருங்கிணைப்பாளர் அப்சரி சிங்காபாபு திலகரத்தன கலந்து கொண்டார். கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயம் மற்றும் கிளிநொச்சி இந்துக் கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளுக்குமான பெண்களுக்கான கடினப்பந்துத் துடுப்பாட்டப் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதமளவில் நடத்துவதற்கு இதன்போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ற-159)

## சுசந்திகா ஒலிம்பிக் பதக்கம்பெற்று 20 ஆண்டுகள் நிறைவு

இலங்கையின் குறுந்தூர ஓட்ட வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க ஒலிம்பிக் பதக்கத்தை வென்று நேற்றுடன் 20 வருடங்கள் நிறைவுபெறுகின்றன.

2000 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டியில், 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் கலந்து கொண்டு சுசந்திக்கா ஜயசிங்க பதக்கம் வென்றிருந்தார்.

2000 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற அமெரிக்கக் குறுந்தூர ஓட்ட வீராங்கனை மெரியன் ஜோன்ஸ் தடை செய்யப்பட்ட ஊக்க மருந்தைப் பயன்படுத்தியமை உறுதிசெய்யப்பட்டமையினால் அவர் தங்கப் பதக்கத்தை இழந்தார். அதனால் இந்தப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் சுசந்திக்கா ஜயசிங்கவுக்கு வழங்கப்பட்டது.

வேலையாள்கள் தேவை
வீட்டு வேலை செய்வதற்கு பெண் வேலையாள்கள் தேவை. (30 - 40 வயதுக்குட்பட்டவர்கள்)
077 400 5023

Techno World
தொழில்நுட்பக் கல்லூரி
A/L தொழில்நுட்ப பிரிவு 2022
பொறியியல் தொழினுட்பம், உயிர்முறைமைகள் தொழினுட்பம்
புதிய பிரிவு ஆரம்பம்
10.10.2020 காலை 08.00 மணிக்கு
(சகல பாடங்களும் ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்)
AL 2021, 2022 பொறியியல், உயிர்முறைமைகள் தொழினுட்பபிரிவு மாணவர்களுக்கான கல்விச் சுற்றுலா
கண்டி, நுவரெலியா, ஹட்டன்
October 19,20,21
ஆராய்ச்சி நிலையம்.
பண்ணை (New Zealand Farm).
Tissue Culture Lab.
Automobile lab பார்வையிடப்படும்.
தொடர்புகளுக்கு 077 017 5346, 077 170 3549

# யாழ்.மாவட்ட செயலக அணி கரம் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம், செப்.30

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் நடத்திய மாவட்ட அணிகளுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான கரம் போட்டியில் யாழ் மாவட்ட செயலக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி பஞ்சலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. ஆண்களுக்கான இறுதியாட்டத்தில், யாழ் மாவட்ட செயலக அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட செயலக அணி மோதியது. இதில் யாழ் மாவட்ட செயலக அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ் மாவட்ட செயலக அணியை எதிர்த்து மன்னார் மாவட்ட செயலக அணி மோதியது. இதில் யாழ் மாவட்ட செயலக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது. (ற-422)



## பள்ளிமுனை சென். லூசிய கால்பந்து கழகம் வெற்றி

மன்னார், செப்.30

அன்ரன் வெற்றிக் கிண்ணத்துக்கான மாபெரும் கால்பந்து சுற்றுப் போட்டியில், பள்ளிமுனை சென் லூசிய கால்பந்துக் கழகம் வெற்றிபெற்றது.

நானாட்டான் றீகன் ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஏற்பாடு செய்த ஏ.கே.ஆர். நிறுவனத்தின் நிறுவுனர் அன்ரனின் பிறந்த நாளை முன்னிட்டு இந்தக் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி கடந்த 24 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நானாட்டான் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது. சுமார் 36 விளையாட்டுக்கழகங்கள் கலந்து கொண்ட இந்தப் போட்டியின் இறுதிச் சுற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது. இந்த இறுதிச்சுற்று மன்னார் பள்ளிமுனை சென் லூசிய கால்பந்து கழகத்துக்கும், ஜோசப்வாஸ் நகர் ஐக்கிய கால்பந்து கழகத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

இதில் பள்ளிமுனை சென் லூசிய கால்பந்துக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற மற்றும் இரண்டாம் இடத்தைப் பெற்ற கழகங்களுக்கு பணப்பரிசில்கள் மற்றும் வெற்றிக் கேடயம் வழங்கிவைக்கப்பட்டன. (ற-56)


## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், செப்.30

தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாண மாவட்ட அணிகளுக்கிடையே நடத்தும் "யாழின் நாயகன்" கால்பந்தாட்டத் தொடர் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு ஐயனார் அணியை எதிர்த்து ஒலிம்பியா அணியும், பிற்பகல் 4.30 மணிக்கு பொலிகை பாரதி அணியை எதிர்த்து கலைவாணி அணியும் மோதவுள்ளன. (ற-422)

## மரண அறிவித்தல்



### அருட்பணி அல்பிறட் விக்ரர் ஜெயசிங்கம் அமதி

அருட்பணி அல்பிறட் விக்ரர் ஜெயசிங்கம் அமதி அவர்கள் இறைபதமடைந்தார். இவரின் உடல் யாழ்-கொழும்புத்துறை புனித இயூஜின் டி மசெனட் சிற்றாலயத்தில் நாளை (01.10.2020) வியாழக்கிழமை பி.ப 1.30 மணி வரை வைக்கப்பட்டிருக்கும். அதன் பின்பு மாலை 3.30 மணிக்கு யாழ் மரியன்னை பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்-புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
அருட்பணி எட்வின் வசந்தராஜா அமதி
மாகாண முதல்வர்- அமல மரித்தியாகிகள் சபை
யாழ்ப்பாணம்.